# டொராண்டோவில் வாழும் தமிழ் இன மக்களின் குறைகள்/இயலாமை, நாகரிகம் மற்றும் சேவை நிர்ணயம்.

The Roeher Institute (தி ரோஹெர் இன்ஸ்டிட்யூட்)

ஜூலை 2004

United Way of Greater Toronto
Without you, there would be no way.

Community Living Toronto In support of people with an intellectual disability

L'INSTITUT ROEHER INSTITUTE

**நன்றி நவிலுதல்**

இந்த ஆராய்ச்சியை முடிந்தவரை மிக சிறப்பாக செய்வதற்கு தங்களின் ஒத்துழைப்பை நல்கிய டொரண்டோவில் பணி நிமித்தம் வாழும் இனத்திற்கு ரோஹெர் ஸ்தாபனம் தன் நன்றியை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறது. மேலும் எங்களின் சிறப்பான நன்றிகளை பாப் ஃபெர்குசன், கரென் க்ளோயர், பீட்ரா அஸ்ஃபா, லோரி க்யூமிங், பால் சாம்சன், டேவிட் பிட் மற்றும் லாய்லா இப்ராஹிம் தெரிவித்துக் கொள்கிறோம்.

பொது கருத்தை எடுக்கும் செயலை முழுமையடைய செய்தவர்கள், குழுக்கள் ஒருங்கிணைத்தல் மற்றும் நேர்முகம் காணல் ஆகியவற்றின் போது, தங்களின் நேரத்தை ஒதுக்கி, கருத்துகள் மற்றும் அனுபவங்களை வழங்கியவர்களுக்கும் எங்களின் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். உங்களின் ஒத்துழைப்பு இல்லாவிட்டால் இந்த ஆராய்ச்சி முழுமை பெற்றிருக்காது.

**டொராண்டோவில் வாழும் சீன, சோமாலி மற்றும் தமிழ் இன மக்களின் குறைகள்/இயலாமை, நாகரிகம் மற்றும் சேவை நிர்ணயம்.**

## தீர்மானத்தின் சுருக்கம்

*டொராண்டோவில் வாழும் சீன, சோமாலி மற்றும் தமிழ் இன மக்களின் குறைகள்/இயலாமை, நாகரிகம் மற்றும் சேவை நிர்ணயம்* குறித்த ஆவணத்தின் கருத்து சுருக்கம்தான் இது. டொராண்டோவில் வாழும் மூன்றுவித சிறுபான்மை இனத்தினரிடையேயான குறைகள்/ இயலாமைகளை புரிந்துகொள்ளுதல் மற்றும் இந்நகரத்தில் இருக்கும் சமூக சேவை வழங்குபவர்களுடன் இம்மூன்று இனங்களை சார்ந்தவர்கள் கொண்டுள்ள தொடர்புகள் குறித்து ஆய்ந்தறியும் ஒரு ஆராய்ச்சி திட்டம்தான் இது.

இருமடங்கு பயன்பாடுகளை இந்த ஆய்வு கொண்டுள்ளது: முதலாவதாக, சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் அவர்களிடையே நிலவும் குறைகள்/இயலாமைகளை எந்த விதமாக அறிந்து கொண்டுள்ளார்கள் என்றும் அவற்றை எவ்வாறு கையாளுகிறார்கள் என்பதையும் இந்த திட்டத்தின் கூட்டாளிகள் அறிந்துகொள்ள விரும்புகிறார்கள். இரண்டாவதாக, இன உறுப்பினர்களிடையே நிலவும் குறிப்பிட்ட குறைகள்/இயலாமைகளை ஆதாரமாகக் கொண்டு, தற்போது நடைமுறையில் உள்ள சேவைகள் தோல்வி அல்லது வெற்றி பெற்றுள்ளதா என்பதை அறிந்து கொள்ள இந்த திட்டத்தின் கூட்டாளிகள் விரும்புகிறார்கள்.

இந்த இரண்டு காரணிகளான – மனோநிலை மற்றும் நம்பிக்கைகள், மேலும் சேவை வழங்குபவர்களுடன் ஒருமித்த உணர்வுடன் நடந்து கொள்ளுதல் ஆகியவை குறைகள்/இயலாமைகளை கொண்ட இனப்பற்று வாய்ந்த மக்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களின் வாழ்க்கைகளை எப்படி பாதிக்கிறது எனவும், அதற்கான செயல்முறை தீர்வுகளை வழங்குதல்மூலம், டொரோண்டோவில் வாழும் சிறுபான்மை இனத்தைச் சார்ந்த சமூகத்தினர்களுக்கு, அதிக அளவில் பலனளிக்கும் வகையில், சேவை நிறுவனங்களை ஈடுபட செய்யமுடியும் என்பதை அறிந்து கொள்ளுதல் ஆகியவற்றை இறுதி நோக்கமாக இந்த செயல்திட்டம் கொண்டுள்ளது.

இந்த ஆராய்ச்சியானது நான்கு பெரும் பகுதிகளை கொண்டுள்ளது:

1. டொரண்டோவில் இருக்கும் சீன, சோமாலி மற்றும் தமிழ் இன மக்களுக்கு ஏற்படும் குறைகள்/இயலாமைகள் பற்றிய குறிப்பிட்ட நாகரீக தொடர்பு, மனோபாவம் மற்றும் நம்பிக்கைகள் ஆகியவற்றை அடையாளமிட்டு காட்டும் ஒரு நல்லொழுக்க முறையில் ஏற்படும் குறுக்கீடு தொடர்பான மதிப்புரை அதோடு, இதுபோன்ற ஆய்வில் ஈடுபட்ட முன்னாள் ஆய்வாளர்கள் மற்றும் செயல்முறையாளர்கள் ஆகியோர்களால் கண்டறியப்பட்ட குறிப்பிட்ட நாகரீக தொடர்பு, மனோபாவம் மற்றும் நம்பிக்கைகள் ஆகியவைகளை மிகச் சிறப்பாக

இடம்பெற செய்வதற்கான சமூக சேவை மற்றும் ஆலோசனை செயல்முறைகள்;

2. ஆராய்ச்சி நடைபெற்று கொண்டிருக்கும்போது, அதற்கான வழிகாட்டுதல், நிர்ணயம், ஆதரவு ஆகியவற்றை பெறுவதற்காக ஆய்விற்கான குழுக்களின் உறுப்பினர்களோடு செய்யப்படும் சமூக ஆலோசனைகள்;

3. சேவைகளை வழங்கும் தனி நபர்களுடனான கட்டுகோப்பான நேர்காணல் மற்றும் ஆய்விற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்களின் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பொதுவான மற்றும் குறைகள்/இயலாமைகள் தொடர்பான ஆதரவுகள், பிற நாட்டிலிருந்து வந்து குடியேறிய குறிப்பிட்ட சமூகத்தினர் களிடையே எதிர்கொள்ளப்படும் இயற்கையான ஆட்சேபனைகளை ஆராய்தல் மற்றும் கடந்த காலத்தில் பயனுள்ளதாக இருந்த சேவை அணுகுமுறைகளை அறிந்து கொள்ளுதல்;

4. குறைகள்/இயலாமைகள் கொண்ட மனிதர்களை கொண்டு ஒன்று திரட்டப்பட்ட குழுக்கள், அவர்களின் குடும்பத்தினர்கள், ஆராய்ச்சிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்றுவிதமான சமூகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் மற்றும் குறிப்பிட்ட இன சமூக சேவை நிறுவனங்கள் ஆகியோர்களிடையே நடத்தப்படும் மிக விரிவான பொது கருத்தாய்வு ஆகியவை.

முக்கிய கண்டுபிடிப்புகள்

- தற்காலிக நிம்மதி, தங்குமிட பாதுகாப்பு மற்றும் ஆதரவளிக்கப் பட்ட பொழுதுபோக்கு ஆகியவைகளைவிட மிக அதிகளவில் மருத்துவ மற்றும் புனர்வாழ்வு அளிக்கும் சேவைகளில் சீன, தமிழ் மற்றும் சோமாலி சமூகங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஏறக்குறைய முழுமையாக பெறுவதற்கான வழி செய்தல்.

- தனிப்பட்ட நபர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களை சார்ந்த பெரும்பாலோனர்களுக்கு, ஆதரவு அளிக்கும் சேவைகளை திறமையாக நிர்வகித்து, அதன் விரைவான வளர்ச்சிக்கு காரணமாக இருக்கும் அதிகார அமைப்புகள் செயல்புரியும் விதமும், அவற்றிலிருந்து ஆதரவுகள் மற்றும் சேவைகளை எப்படி பெறுவது என்றும் தெரிவதில்லை. ஆகையால், அவர்களுக்கு தேவையான கல்வியறிவு மற்றும் உதவிகளை செய்தல்.

- குறைகள்/இயலாமைகள் கொண்ட குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பங்களுக்கு தேவைப்படும் போதுமான உதவிகளை, இந்த அதிகார அமைப்புகள் அளிக்கவில்லை என்பது ஒவ்வொரு குழுவையும் தற்போதைய ஆராய்ச்சியினால் ஆய்ந்தறிந்ததன் மூலம் கண்டறிப்பட்டுள்ளது.

- ஒவ்வொரு குழுவினையும் தற்போதைய ஆராய்ச்சியினால் ஆய்ந்தறிந்து, உளவியல் ரீதியாக பிரச்சனைகளை அனுபவித்துவரும் மனிதர்களுக்கான சேவையை ஒருங்கிணைப்பதற்கான செயல்பாடுகள் எடுக்கப்பட்டது. மனத்திற்குரிய மற்றும் மற்றைய குறைகள்/இயலாமைகள் கொண்டவர்களுக்கான கல்வி மற்றும் ஒழுங்குபடுத்தியமைத்தலின் இயல்பான முடிவை வெளிப்படுத்துகிற விரிவாக்கத்தின் செயல்முறை விளைவுதான் இது.

- பிரஜா உரிமைக்கு ஏதேனும் ஆபத்துகள் ஏற்படலாம் அல்லது மற்றைய குடும்ப உறுப்பினர்களுக்கான திருமண வாய்ப்புகள் பாதிக்கப்படலாம் என்ற பயத்தின் காரணமாக குடும்பத்திற்குள் இருக்கும் குறைகள்/இயலாமைகளை வெளிப்படுத்த பிரியமில்லாதவர்களாக குழு உறுப்பினர்கள் இருக்கக்கூடும்.

- கல்வி நிலையினால்தான் இந்த காரணியை செல்வாக்குள்ளதாக செய்ய முடியும் என்றாலும், ஓர் அழிவு உண்டாகக்கூடும் என்ற நம்பிக்கை மனோபாவத்தை ஒவ்வொரு குழுவும் கொண்டுள்ளது. உதாரணமாக, மனத்தொடர்பான குறைகள்/இயலாமைகள் இருப்பதை, “கடவுளின் விருப்பம்” என்றும், தனி நபரின் வலிமை மற்றும் நம்பிக்கைக்கான ஒரு சோதனையை, “அப்படியும் இருக்கும்” என்பது போன்றவைகளை கூறலாம். ஒரு குடும்பம் அல்லது தனிப்பட்ட நபரின் சூழ்நிலையை மாற்றுவதற்காக எடுக்கப்படும் எந்த ஒரு விளைவும், சமூக அந்தஸ்தை பலர் முன்னிலையில் பாதிக்கும் ஆபத்தான அவமானமாக கருதப்படலாம்.

- சமீபத்தில் பல்வேறு நாடுகளிலிருந்து குடியேறியவர்களில் இந்த மூன்று குழுக்களில் உள்ள ஒவ்வொருவருக்கும், ஆங்கில மொழியில் சரளமாக பேச இயலாத, குறைகள்/இயலாமைகள் கொண்ட குழந்தைகளுக்கான பள்ளிகளை தேர்ந்தெடுப்பது குறித்த ஆதரவும், தகவலும் தேவைப்படக்கூடும்.

- குறைகள்/இயலாமைகள் கொண்ட மனிதர்களுக்காக, உயர்ந்த நிலைகளில் உள்ள சமூக ஆதரவு அளிக்கும் சிறப்பியல்பாக இருக்கக்கூடியவற்றை ஆய்விற்கான குழுவில் இருக்கும் ஒருவர்கூட பெற்றிருக்கவில்லை. பெரும்பான்மையான ஆதரவு அவர்களின் பெற்றோர்கள், தாத்தாகள், பாட்டிகள் மற்றும் வாரிசுகளாலேயே வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

- ஒருவரின் குறைகள்/இயலாமைகள் இறுதியில் குணமாகிவிடக் கூடும் என்று தனிநபர்கள் மற்றும் குடும்பங்கள் நம்பிக்கையை கொண்டிருக்கக்கூடும். உதவியை ஏற்றுக் கொள்ளுதல்- அதிலும் குறிப்பாக, ஒரு நபர் எந்நிலையிலும் குணம் பெற வழியில்லை என்றால், வெளிப்படையான நீண்ட-கால உதவியை (உதாரணமாக, ஒரு சக்கர நாற்காலியை வாங்குவதற்கான உதவி) - ஏற்றுக் கொள்ளுதலை காண முடிகிறது. நம்பிக்கையிலிருந்து ஏற்றுக் கொள்ளுதல் நிலைக்கு ஏற்படும் மாறுதல், குடும்ப செயல்பாட்டில் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.

- குறைகள்/இயலாமைகள் கொண்ட தனிநபர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினர் ஆகியோர்களுக்கு ஒரு களங்கம் இதனால் ஏற்படுகிறது. பரம்பரையாக வரும் களங்கத்துடனான ஜீன் குறைபாடு அதோடு பாரம்பரிய குணம் குறித்த நம்பிக்கைகள் ஆகியவை ஒரு குடும்ப உறுப்பினரின் குறைகள்/இயலாமைகளை அவர்கள் சார்ந்த சமூகத்தினரிடமிருந்துகூட மறைக்கப்படுகிற சாத்தியத்தை உயர்த்தும்

## முக்கிய பரிந்துரைகள்

கனடாவின் சேவை நிலையங்கள், அவர்களுடைய சமூகத்தினரிடையே திடீர் பிரவேசம்/எதிர்பாரா ஆக்ரமிப்பு செய்யும் வழக்கத்தை மேற்கொள்ளக்கூடிய பல வழிகளை ஆராய்ச்சியில் பங்கு கொண்டவர்கள் தெரிவித்து உள்ளனர். இவ்வாறு மறைமுகமாக தெரிவிக்கப்பட்ட கருத்துகளில் முக்கியமாக தகவல்களுக்கு இடமளித்தல், கல்வி மற்றும் நம்பிக்கையினால் ஏற்படும் பொறுப்பு ஆகியவை கையாளப்படுவதோடு, பின்வருபவையும் அடங்குகிறது:

1. நிறுவனம் மற்றும் இது வழங்கும் சேவைகள் ஆகியவற்றை குறித்து தகவல் அளிக்கும் சிறு துண்டு பிரசுரங்களை (மாண்ட்ரின் மற்றும்/அல்லது காண்டோனீஸ், தமிழ் மற்றும் சோமாலி மொழிகளில்) ஒரு தொடராக வழங்குகிறது. இந்த துண்டு பிரசுரங்கள், சமூக-பண்பாடு நிறுவனங்களின் ஆலோசனை பேரில் அவைகளின் நிபந்தனைகளுக்குட்பட்டு தொகுக்கப் பட்டுள்ளது.

மேலும் ஆரம்ப நிலையில் உள்ள பதிப்புகளை ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரின் பொறுப்பு வரையறுக்கப்பட்ட பிரிவுகளிடம் புற-சோதனை செய்ய வேண்டும்.

2. மனம் தொடர்பான குறைகள்/இயலாமைகள் குறித்த சுருக்கமான தகவல் பிரசுரங்களை ஒரு தொடராக தயாரித்தல், குறிப்பிட்ட குழுக்களுக்கு தேவையான விவரங்களை அதாவது இந்த அறிக்கையில் கண்டறியப்பட்ட முக்கிய விஷயங்களை குறிப்பிட்டு காட்டப்படுபவைகளை வழங்குதல் ஆகியவை. உதாரணமாக சோமாலி மொழியில் உள்ள துண்டு பிரசுரத்தில், மன ஆரோக்கியம் மற்றும் மனம் தொடர்பான குறைகள்/ இயலாமைகள் ஆகியவற்றிற்கு இடையேயான வேறுபாட்டை முக்கியப்படுத்திக் காட்டுதல், மேலும் இத்தகைய குறைகள்/ இயலாமைகளுக்கு காரணமான உயிரிகள் சம்பந்தமான மருத்துவ நிபுணர்களின் கருத்துகளை சுருக்கமாக குறிப்பிட்டு காட்டுதல் என்பது போன்றவைகளாகும். கனடாவின் மன நல சங்கம் இதற்கு உதாரணமாக விளங்கி பயன் அளிக்கும் பல உபயோகமான விஷயங்களை தொடராக தயாரித்துள்ளது.

3. இன-நாகரீக சம்பந்தமான நிறுவனங்களுடன் முறையான உறவுகளை நிறுவுதல் மற்றும் மனம் தொடர்பான குறைகள் / இயலாமைகள் குறித்தவைகளை கற்றுக் கொள்ளுவதற்காக, ஆதாரங்களை அர்ப்பணிப்பதற்கு விருப்பம் தெரிவிக்கக்கூடிய, பிற நாடுகளிலிருந்து குடியேறிவிட்ட வேலையாட்கள், தனிப்பட்ட நபர்கள் மற்றும் குடும்பங்களிடையே ஒரு வலை பின்னலை உண்டாக்குதல், துண்டுபிரசுரங்களை ஏற்றுக் கொள்ளுதல் மற்றும் நகல் எடுத்தல் மற்றும் பல.

4. முடிந்தவரை, ஆங்கிலத்தை தவிர, அவரவர்களின் தாய் மொழியிலேயே ஒருங்கிணைப்பு சேவையை அளிப்பதற்காக, மொழி மாற்றத்தின்மூலமாகவோ அல்லது போதுமான புலமை பெற்றவர்களை பணியில் நியமித்தல் மூலமாகவோ உதவியை வழங்குதல்.

5. டொராண்டோ பகுதியில் உள்ள பள்ளிகளில், ஆய்விற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள சமூகத்தினரிடையே ஓர் நல்லிணக்கம் ஏற்பட செய்தல் அதிலும் குறிப்பாக வேறு தேசங்களிலிருந்து குடியேறியவர்களின் குழந்தைகள் மற்றும் குறைகள்/இயலாமைகள் கொண்ட இளைஞர்கள் போன்றவர்களின் தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து முன்னேற்றம் அடைவதற்கான சேவையை செய்தல்.

6. சிறுபான்மை இன சமூகத்தினரிடையே இருவிதமான தகவல் அளிப்பு ஆட்சேபனைகள் உள்ளன: (1) இன-நாகரீக குடியேற்றம், பொழுதுபோக்கு மற்றும் நாகரீகத்தை அடிப்படையாகக் கொண்ட நிறுவனங்கள் ஆகியவற்றுடன் தொடர்புடைய தனிப்பட்ட நபர்கள் மற்றும் குடும்பத்தினர்களை அணுகும்போது உண்டாகும் ஆட்சேபனைகள்; (2) குறிப்பிட்ட நாகரீகத்தின் மீதான களங்கத்தின் காரணமாக, குறைகள் / இயலாமைகள் கொண்ட தனிப்பட்ட நபர்கள்

மற்றும் குடும்பத்தினர்களை அணுகும்போது உண்டாகும் ஆட்சேபனைகள் ஆகியவை. ஆகையால் முடிந்தவரை பெருமளவில் இந்த தகவல்களை கேட்பவர்களை அணுகும் முறையாவது, இலக்காக மற்றும் அங்கும் இங்குமாக பரவி வாழ்பவர்களிடையே மறைமுக முறையில் தகவலை பரப்புதல் என்பதாகும்.

7. குறிப்பிட்ட இன சேவை நிறுவனங்களை அணுகி, அவற்றின் ஆதரங்களை பயன்படுத்திக் கொள்ளுதல். அதாவது, பல சேவை நிறுவனங்களைச் சார்ந்த பிரதிநிதிகளிடம் நேர்காணல் நடத்திய பொழுது, அவர்கள் மையமாக எடுத்துக் கொண்ட குழுக்களிடையே பங்குபெற்று, கல்வி நிறுவனங்கள் மற்றும் தகவல் வழங்குதல் தொடர்பான உரையாடல்கள் மற்றும் நிபுணத்துவ கருத்தரங்குகளுக்கு தேவையான உதவி மற்றும் இட உதவி அளித்திருப்பது தெரிய வந்துள்ளது.

8. உண்மையிலேயே சோமாலி, தமிழ் மற்றும் சீன இனத்தைச் சேர்ந்த தனி நபர்கள் சொல்லும் தங்கள் அனுபவங்கள், ஆலோசனைகள் குறித்த ஒரு வீடியோ காட்சியை உருவாக்குதல் தொடர்பான ஆர்வம் வெளிபடுத்தப்பட்டுள்ளது. இத்தகைய வீடியோ காட்சிகளின்மூலம், அந்தந்த சமூகத்தினரிடையே நிலவும் பல அணுகுமுறை தடைகளை எடுத்து காட்டுவதால், ஒரு சமூக சார்ந்த உறுப்பினர்கள், அதே சமூகத்தை சேர்ந்த மற்ற உறுப்பினர்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சனைகளை கேட்பது/ காண்பதால், மனோநிலை குறித்த நம்பிக்கை மற்றும் தடைகளை கடப்பதற்கு இத்தகைய விஷயங்கள் உதவி செய்யக்கூடும்.

9. இந்த மூன்று சமூகத்தை சேர்ந்தவர்களுமே, செய்திதாள், இணைய தள தொடர்பு மற்றும் வானொலி நிகழ்ச்சிகளை கேட்டல் போன்ற ஒரு வளமான வலைதொடர்பை கொண்டுள்ளனர். குறிப்பாக சோமாலிகள், ஞாயிறு கிழமை இரவுகளில் ‘சின்’ CHIN (AM 1540) தலைமையேற்று நடத்தப்படும் வாராந்திர வானொலி நிகழ்வுகளின் மூலம் வழங்கப்படும் தகவல்களை உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றனர். அந்த சமூகத்தை சேர்ந்த பெரும்பான்மையான மக்கள் இந்நிகழ்ச்சிகளை கேட்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வாராந்திர நாட்களில் மதியம் 1.00 மணி முதல் மாலை 6.00 வரை நிகழ்ச்சிகளை கேண்டோனீஸ் மொழியிலும்கூட CHIN வழங்கி வருகிறது. தமிழ் நிகழ்ச்சிகளை கேட்பதற்கு, அதற்கென விற்கப்படும் சிறப்பு வானொலிகளை, டொராண்டோவில் தமிழர்களால் நடத்தப்படும் கடைகளிலிருந்து பெற்று கேட்கலாம். குறிப்பிட்ட இன தொடர்பான நிறுவனங்களிலிருந்து உதவிகளை கேட்க பயப்படும் அத்தகைய மக்களை அணுகுவதற்கு, இந்த முறையானது மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

10. இன-நாகரீக நிறுவனங்களுடன் இணைந்து பணி செய்வதன்மூலம், குறைகள்/இயலாமைகள் கொண்ட தனி நபர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பங்களுக்காக செயலாற்றும் ஆதரவு

குழுக்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள முடியும். இந்த தொடர்பின்மூலம், குறைகள்/இயலாமைகள் கொண்ட மக்களை அணுகி, “அவர்களுடைய மறைவிடத்திலிருந்து” வெளியே வருமாறு செய்து, அதே போன்ற நிலையில் இருக்கும் மற்றவர்களுடன், பாதுகாப்பான சூழ்நிலையில் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ள வழி வகுக்க செய்ய முடியும்.

11. மனித நேய சேவைகளின் ஆராய்ச்சியினை வெளியாக்கும் நிகழ்கால புலமையை நிர்வகிப்பதற்கு ஊழியர்களை ஊக்குவிக்க வேண்டும். மேலும், நிகழ்கால புலமையை நிர்வகிக்கவும், சேமித்து வைப்பதற்குமான வாய்ப்பினையும் ஊழியர்களுக்கு வழங்க வேண்டும். டொராண்டோவின் பலவிதமான மக்கள் தொகைகளின் மாறிவரும் தேவைகளுக்கேற்ப தங்கள் செயல்முறை அமைத்துக் கொள்ள நிறுவனங்களுக்கு கற்றுக் கொள்ளும் கலாச்சாரத்தை நிறுவுவது உதவி செய்யும்.

# முகவுரை

கனடாவில் வெளிநாடுகளிலிருந்து வந்த மக்கள் குடியேறி வாழும் இடங்களில் முக்கியத்துவமான இடமாக தொடர்ந்து டொராண்டோ பகுதி இருந்து வருகிறது. இந்த நாட்டில் அயல்நாட்டை பிறப்பிடமாக கொண்ட மக்களில், நாற்பத்தி நான்கு சதவீதத்தினர், கிரேட்டர் டொராண்டோ பகுதியில் (GTA) வசிக்கின்றனர். அயல்நாட்டில் பிறந்த கனடாவினரில் (கனடா புள்ளியியல், 2003-ன்படி) 38% சதவீதத்தை தாயகமாக கொண்டுள்ள வான்க்குவர் நகரத்துடன் மட்டுமே இந்த எண்ணிக்கையை ஒப்பிட்டு விகிதப்படுத்த முடியும். தி யுனைடெட் வே-யின் அறிக்கையின்படி, இந்த பிரதேசத்தின் மொத்த மக்கள்தொகையில் 50% சதவீதத்தினர், டொராண்டோ நகரத்தில் வசிக்கின்றனர். இந்த மைய பிரதேசமானது, GTA (கிளமெண்ட் 1999) வில் அயல் நாட்டிலிருந்து புதியதாக குடியேறும், 71% சதவீதத்தினர் இந்த மையப் பகுதியை இருப்பிடமாக கொள்கின்றனர்.

இவ்வாறு பல்வேறு நாகரீகம், மொழிகள், நம்பிக்கைகள் மற்றும் பழக்கவழக்கங்கள் நிறைந்த தனிநபர்கள் மற்றும் குடும்பங்களை பெரும் விகிதாச்சாரமாக கொண்டுள்ள இந்த மாநகரம், சமூக சேவை முகவர்களுக்கு, ஒரு உண்மையான போட்டியாக விளங்குகிறது. சேவை நிறுவனங்கள் கண்டிப்பாக புதிய நுகர்வோர்களை அவர்களின் வழியில் வேலையில் ஈடுபடச் செய்வதோடு, அவர்களின் தேவைகள் மற்றும் வரையறைகளை மதிப்பதாக இருக்க வேண்டும்.

மனத்தொடர்பான குறைகள்/இயலாமைகள் கொண்ட நபர்களுக்கு, சேவை வசதிகளை வழங்குவதில், குறிப்பாக இத்தகைய இரட்டை முறையானது தேவையானதாக இருக்கிறது.

மனத்தொடர்பான குறைகள்/இயலாமைகள் மற்றும் மன நல விஷயங்களை குறித்த பல விதமான நம்பிக்கைகளை விடாப்பிடியாக கொண்டுள்ள பல்வேறு விதமான சமூக இனத்தவர்களை கொண்டு, GTA-வின் மக்கள் தொகை அமைந்துள்ளது. மனத்தொடர்பான குறைகள்/இயலாமைகள் மற்றும் மன நல விஷயங்கள் ஆகியவற்றை வெளிப்படை அடையாளமாக கொண்டுள்ள மக்களை, தவறாக புரிந்து கொள்ளுதல் மற்றும் தவறான நம்பிக்கைகள் என்று மேனாட்டு அறிவியலால் அழைக்கப்படும் பல்வேறுவிதமான சமூக மனோநிலைகளை அடிப்படையாக கொண்டவைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

மனத்தொடர்பான/மனத்திற்குரிய விஷயங்களை கடவுளிலிருந்து பெற்ற தண்டனை அல்லது சோதனை; வாழும் இடத்தை ஆவிகள் பாதித்ததால் ஏற்பட்ட விளைவு; கர்ப்பமான பெண்கள் பார்த்ததினால் அல்லது மனத்தொடர்பான நிலையில் இருப்பவருடன் தொடர்பு ஏற்படுத்தி கொண்டதினால் ஏற்பட்ட விளைவு; அல்லது தவறான நடவடிக்கையினால் ஏற்பட்ட விளைவுகள் என்பது போன்ற கருத்துகள் இத்தகைய நம்பிக்கைகளில் அடங்கும்.

மனத்தொடர்பான குறைகள்/இயலாமைகள் மற்றும் மன நல விஷயங்கள் பற்றிய இத்தகைய நம்பிக்கைகள் பல வழிகளில், பல நாகரீகங்கள் குறித்த கவன ஈர்ப்பை கொண்டு வருகிறது. அதே சமயம், “இன மற்றும் சமூக வாழ்க்கையின் ஒவ்வொரு முக்கிய வாய்ப்புகளிலும், குறைகள்/இயலாமைகள் கொண்ட மக்கள் முழுமையாக பங்கு கொள்வதை ஒவ்வொரு சமூகமும் தவிர்க்கிறது. கனடாவிலும், மற்ற இடங்களைப் போலவே, குறைகள்/இயலாமைகள் கொண்ட மக்களை நடத்தும் விதம் மிக அற்பமான நிலையிலேயே உள்ளது. அதிலும் குறிப்பாக, கல்வி ஸ்தாபனங்களில் சேர்த்துக் கொள்ளுதலை தவிர்த்தல், பெரும்பான்மையான சமூக மற்றும் பொழுதுபோக்கு வாய்ப்புகளை அவர்கள் அணுகுவதை தவிர்த்தல், மற்றும் அடிப்படை மனித உரிமைகள மறுத்தல் என்பவையாகும்” உதாரணமாக, திருமணம் செய்து கொள்ளும் உரிமை, குழந்தைகள் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் தனக்கென சொத்துகளை உரிமையாக்கி கொள்ளுதல் போன்றவையாகும் (தி ரோஹெர் இன்ஸ்டிட்யூட், 2003, 11)

இயல்பான நிலைக்கு மாறான பண்புகளை கொண்ட மனிதர்களை உள்ளடக்கிய சமூகத்திற்கு மிகப் பெரிய தடைகளாக இருப்பதாவது, தனிப்பட்ட ஒருவரைவிட, சமூகத்தின் கட்டமைப்பு மற்றும் செயல்நிலை என்று காட்டப்பட்டுள்ளதை இந்த நாட்டின் மனோநிலை குறைகள்/இயலாமைகள் என்பதன் வரலாறு எனக்கூறலாம். அதாவது குறைகள்/இயலாமைகள் கொண்ட மனிதர்களின் மனப்பான்மையை காட்டிலும், வெளிப்புறத்திலேயே பெரும்பான்மையான தடைகள் உள்ளன.

சிறுபான்மை இன மக்கள் கூட்டத்தினரிடையே இத்தகைய தடைகள் குறைவாக இருக்கக்கூடும் என்று கூறுவதிற்கில்லை. ஏனெனில், இன-நாகரீக சமூகத்தினர்கள் அதாவது அவர்களின் மாறுபட்ட நிலையினால் வரையறுக்கப்படுகிறவர்கள், பல வகையான தேவைகள் தொடர்பான மற்றும் பிரச்சனைகளை எதிர்கொள்கிறவர்கள் முன்பைக் காட்டிலும் அதிகமாக அடிக்கடி ஒதுக்கி விலக்கப்படுகிற நிலையை இத்தகைய குறைகள்/இயலாமைகளினால் அனுபவிக்கின்றனர். ஆங்கிலம் மற்றும்/அல்லது ஃப்ரெஞ்சு மொழிகளுக்கு போதுமான வாய்ப்புகள் இல்லாத நிலை; சாத்தியமான தொழில்களை செய்வதற்கு போதுமான கல்வி மற்றும் பயிற்சிகள் இல்லாமை; சமூக சேவை நிறுவனங்கள், நிர்வாக செயல்பாடுகள் மற்றும் புதிய நாட்டில்/பிரதேசத்தில்/நகரத்தில் போதுமான தொடர்புகள் பற்றிய, அதிலும் குறிப்பாக அடைக்கலமாக வந்த மக்களுக்கு – பலாத்காரம், குடும்பத்தினரிடமிருந்து ஏற்பட்ட பிரிவு, அவர்களின் தாய் நாட்டிலிருந்து அவசர, அவசரமாக வெளியேற்றப்பட்ட நிலை போன்று இந்நிலைக்கு முன்பே அவர்கள் எதிர்கொண்ட விஷயங்களினால் ஏற்பட்ட மன அதிர்ச்சி ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு - தேவையான ஆதரவுகள் குறித்த போதிய தகவல்கள் இல்லாமை; ஆகியவை இத்தகைய தேவைகள் தொடர்பான மற்றும் பிரச்சனைகளில் அடங்கும்.

தேவைகள் நிறைவேற்றப்படுவதற்காக காத்திருக்கும் மக்களுக்கு போதுமான சேவைகளை வழங்குவதை தங்களின் கடமைகளாக கொண்டுள்ள அரசியல் மற்றும் சமூக நிறுவனங்களின் கொள்கைகள்

மற்றும் செயல்முறைகளை பெறுவதற்கு தடைகளாக இருப்பவைகளை கண்டறிவதுகூட முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. இவ்வாறான நிறுவனங்களிடமிருந்தே சுதந்திரத்தை பெற்று வெற்றிபெறுவதற்காக, பலதரப்பட்ட மக்களுக்கு தேவைப்படும் ஆதாரங்களுக்கு பாதுகாவலராக இத்தகைய நிறுவனங்களே இருக்கின்றன. இத்தகைய தடைகளில் வேலையாட்களை பணியில் அமர்த்துவதில் பாராபட்சம் காட்டுதல்; கனடாவை தவிர இதர இடத்திலிருந்து பெற்ற கல்வி மற்றும் பயிற்சி ஆகியவற்றிற்கு அங்கீகாரம் அளிப்பதை தவிர்த்தல்; ஊதியத்திற்கேற்ற வகையில் வீடுகளை பெறுவதில் ஏற்படும் பற்றாகுறை (கிளமெண்ட், 1999, 14) மற்றும் வேறு நாடுகளிலிருந்து வந்து குடியேறும் செயல்பாட்டில் ஏற்படும் பற்றாகுறை (ரெய்ட்ஸ் & லம், 2001) ஆகியவை அடங்கும்.

அனைத்து புதிய கனடாக்காரர்களும் இத்தகைய பிரச்சனைகளை எதிர்கொள்வதில்லை என்றாலும், சிறப்பான ஆதரவுகளை எதிர் நோக்கியிருக்கும் பல தனிப்பட்ட நபர்கள் மற்றும் குடும்பங்கள், இத்தகைய பிரச்சனைகளில் பலவற்றை எதிர் நோக்குகின்றனர்.

இத்தகைய நாகரீக மற்றும் சமூக கட்டமைப்பு குறித்த விஷயங்களை தைரியமாக எதிர் நோக்கக்கூடிய, மனத்தொடர்பான குறைகள்/ இயலாமைகளுக்கு எதிரெதிராக டொராண்டோவில் வாழும் சிறுபான்மை சமூக இனத்தவர்களின் தேவைகள் மற்றும் அனுபவங்களை ஆராய்வதற்கான திட்டத்திற்கு நிதிவுதவி செய்யும்படி யுனைடெட் வே ஆஃப் கிரேட்டர் டொராண்டோவை, டொராண்டோவில் வாழும் சமூகத்தினர் [Community Living Toronto (CLT)] மற்றும் **ரோஹெர் ஸ்தாபனம்** ஆகியவை மனு செய்திருந்தது.
அதிலும் குறிப்பாக, இந்த திட்டமானது, இந்த பெருநகரத்தில் வாழும் சீன, தமிழ் மற்றும் சோமாலி இனத்தவர்களை குறித்து ஆராய்வதற்குரியதாகும். இப்படி பகுத்து ஆராயப்படுதலும், அதன் தொடர்ச்சியாக விளங்கக்கூடியபவைகளும், இந்த திட்டத்தின் இறுதி அறிக்கையாக விளங்கும்.

## I. திட்டத்திற்கான விளக்கம்

### A. அறிக்கையின் நோக்கம்

*குறைகள்/இயலாமைகளை அறிந்துகொள்ளுதல் தொடர்பான நாகரீக குறுக்கீடுகள், பிறநாடுகளிலிருந்து குடியேறியுள்ள சமூகத்தினரைச் சேர்ந்த குறைகள்/ இயலாமைகள் கொண்ட மனிதர்களுக்கு சேவை வழங்குதல் மற்றும் குடியுரிமை* என்று தலைப்பிடப்பட்ட திட்டத்தின் மூலம் கண்டறியப்பட்ட பகுப்பாய்வுகள் மற்றும் கலந்துரையாடல்களை இந்த அறிக்கை அளிக்கிறது. இந்த அறிக்கையில் அடங்கியுள்ளவை: (1) இந்த திட்டத்திற்காக செய்யப்பட்ட இலக்கிய மதிப்புரை தொகுப்புகள், (2) சிறுபான்மை இன சமூகத்திலிருந்து வந்த, குறைகள்/ இயலாமைகள் உடைய குழந்தைகளை பெற்றவர்களின் பழக்கங்கள் மற்றும் அனுபவங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றை ஆய்வு செய்யக்கூடிய கலந்துரையாடல்கள் மற்றும் பொது கருத்தாய்வுகளின் பகுப்பாய்வுகள், (3) மையக் குழுக்களின் கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு குறித்த அதிகாரபூர்வமான நடவடிக்கைகள் மேலும் சிறுபான்மை குழுவை சேர்ந்தவர்கள் என்று சுய-முத்திரையிடப் பட்டவர்கள் அல்லது அத்தகைய குழுக்களுக்கு சேவை செய்யும் உறுப்பினர்களாகிய தனிநபர்களுடனான நேர்காணல்கள்; மற்றும் (4) பரிந்துரைகள் மற்றும் செயல்பாட்டிற்காக 'அடுத்து எடுக்க வேண்டிய நிலைகள்' ஆகியவை.

### B. திட்டத்தின் நோக்கம் மற்றும் குறிக்கோள்கள்

இரண்டு முக்கிய வினாக்களை இந்த திட்டம் எடுத்துக் காட்டுகிறது.

1. ஒருவரின் சொந்த சமூகத்தினுள்ள குறைகள்/இயலாமைகள் குறித்த நாகரீக அறிந்து கொள்ளும் தன்மையானது, குறைகள்/ இயலாமைகள் கொண்ட மனிதர்களின் வாழ்க்கை அனுபவங்களை அவர்களின் சமூகத்தினுள்ளும் மற்றும் தேவைப்படுகிற ஆதரவுகள் மற்றும் சேவைகளை அணுகும் பொழுதும் எப்படி பாதிக்கிறது?

2. நாகரீக நம்பிக்கைகளை அறிந்து கொள்ளுதலில் ஏற்படும் குறைபாடு மற்றும் குறைகள்/இயலாமைகள் குறித்த மனோபாவங்கள் ஆகியவை வேகம் குறைதல், சமூக சேவை பணியாளர்களை எட்டாத தூரத்தில், சிறுபான்மை இன சமூகத்திலிருந்து வந்த குறைகள்/இயலாமைகள் கொண்ட மனிதர்கள் வெற்றிகரமான குடியேறுதல் மற்றும் முழு குடியுரிமை பெறுவதற்காக தேவைப்படும் ஆதரவுகள் மற்றும் சேவைகளை வழங்குவதில் சமூக சேவை பணியாளர்களின் வேகத்தை எப்படி குறைக்கிறது?

வழிமுறைகளைப் பற்றிய ஆராய்ச்சி

A. **ஆராய்ச்சி நோக்கம்**

இந்த ஆராய்ச்சியை செய்யும் போது பின்வரும் நிலைகள் செயல்படுத்தப்பட்டன:

1. குறிப்பிட்ட நாகரீகத்தை அறிந்துகொள்ளுதல், அந்த இன நாகரீக சமுதாயத்தினரிடையே நிலவும் குறைகள்/ இயலாமைகள் குறித்த மனோபாவங்கள் மற்றும் நம்பிக்கைகள், மேலும் குறைகள்/ இயலாமைகள் கொண்டவர்களை பாதிக்கக்கூடிய இயல்பான அதன் கருத்துகள்/செயல்முறைகளை கண்டறிவதற்கு உதவும் ஆய்வுகளின் ஒரு நல்லொழுக்க முறையின் - குறுக்கீட்டு இலக்கிய மதிப்புரை இதுவாகும். இதனை பூர்த்தி செய்யும் விதமாக, யார்க் பல்கலைகழகம் மற்றும் டொராண்டோ பல்கலைகழக நூலகங்கள் அதோடு நாகரீகம் மற்றும் சமூக ஆய்வுகள் தொடர்பான - அவற்றில் சமூக அறிவியல் சுருக்கங்கள், சமூக வேலை சுருக்கங்கள், மருத்துவம் மற்றும் விரிவுபடுத்தப்பட்ட கல்வியறிவு (முடிந்தவரை விரைவாக) - உள்ளடக்கிய தலைப்புகளில் இணையதளம் ஆகியவற்றில் ஒரு தேடல் மேற்கொள்ளப்பட்டது. தேடலுக்கான கலைச் சொற்களில் "தமிழர்களுக்கான சேவை", "தமிழர்களின் குறைகள்/ இயலாமைகள்" "தமிழர்களின் ஆரோக்கியம்" போன்றவை உபயோகப்படுத்தப்பட்டு, சேவை மேம்பாட்டுநிலை, குறைகள்/ இயலாமைகளை உணரும் எண்ணம் மற்றும் மனோபாவங்கள்; வட அமெரிக்கர்கள் மற்றும் ஐரோப்பியர்களை மாதிரியாக கொண்ட ஆரோக்கிய பாதுகாப்பு மற்றும் சேவை வழங்கல் சார்பான சிறுபான்மை சமூக குழுக்களின் பொது மனநிலைகள்; மற்றைய சேவை பகுதிகள் மற்றும் குறிப்பிட்ட எல்லைகள்வரை பயன்படுத்தப்பட்ட அணுகுமுறைகள் அதிலும் குறிப்பாக சோமாலி மற்றும் தமிழ் ஜனத்தொகைகளுக்காக குறிப்பிட்ட கவனம் கொடுக்கப்பட்ட ஐக்கிய அரசாங்கம் ஆகியவற்றை பற்றிய விஷயங்களை எடுத்துக் காட்டும் ஆராய்ச்சி கட்டுரைகள் தேடப்பட்டன. தரவுதள தேடல்களுடன் கூட, ஆராய்ச்சிக்காக எடுத்துக் கொண்ட குழுக்களுக்கான மதிப்பு வாய்ந்த தகவல்களை தரக்கூடிய ஆதாரமாக இணையம் இருக்கிறது.

2. தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுபான்மை இன சமூகங்களிலிருந்து வாக்குறுதி மற்றும் ஆதரவை வரவேற்பதற்கான சமூக ஆலோசனைகள். ரோஹெர் ஸ்தாபனைத்தைச் சேர்ந்த ஓர் ஆராய்ச்சியாளர், டொராண்டோவில் வாழும் சமூகத்தின் பிரதிநிதிகள் மற்றும் குறிப்பிட்ட இனத்திற்கான நிறுவனங்கள் ஆகியவர்களுடன் நடத்தப்பட்ட நேர்காணல் வழியாக இந்த ஆலோசனைகள் பெறப்பட்டன.

3. பிற நாடுகளிலிருந்து குடியேறிய சமூகத்தினரிடையே எதிர்கொள்ளப்படும் போராட்டங்களின் இயல்புகளை நன்றாக ஆராய்வதற்காக, குறைகள்/இயலாமைகள் தொடர்பாக அளிக்கப்படும் ஆதரவுகள் மற்றும் குறைகள்/இயலாமைகள்

கொண்டவர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பங்களுக்கு செய்யப்படும் சேவைகள் குறித்து, சேவைகள் வழங்குபவர்களோடு முழுமையான நேர்காணல்கள் மேற்கொள்ளப்பட்டன. டொராண்டோவில் வாழும் பல்வேறுபட்ட சமூக பின்னணிகளை கொண்ட இன சமூகத்தினர்கள் மற்றும் தனிநபர்களை, மற்றவர்களோடு இணைக்கக்கூடிய செயல்முறைகளில் எப்படி சில பாரம்பரிய முறைகளை பின்பற்றும் சமூக சேவகர்களால் மற்றவர்களை காட்டிலும் எளிதாக வெற்றி பெறமுடிகிறது என்ற நோக்கிலும் நேர்காணல்கள் செய்யப்பட்டன.

4. முழுமையாக்கும் விதத்தில், சிறுபான்மை இன சமூகத்திலிருந்து வந்த தனிநபர்கள் மற்றும் சேவை வழங்குபவர்களை இலக்காகக் கொண்ட, எழுத்துவடிவிலான (அச்சு பிரதி அல்லது கணினியில் பதிவு செய்யும் விதத்தில்) பொது கண்ணோட்டங்கள் உருவாக்கப்பட்டன. தனிநபர்களிடமிருந்து பெறப்பட்ட இத்தகைய பொது கண்ணோட்டங்கள் மாண்ட்ரின் சீன மொழி, சோமாலி மற்றும் தமிழ் மொழிகளில் மொழிமாற்றங்கள் செய்யப்பட்டன; சேவை வழங்குபவர்களி பொது கண்ணோட்டங்கள் இதர நடவடிக்கைகளுக்காக ஆங்கில மொழியிலேயே இருந்தன. இந்த பொது கண்ணோட்டங்கள் - டொராண்டோவில் வாழும் சமூகத்தினர் மற்றும் ரோஹெர் ஸ்தாபனத்தின் ஊழியர்கள், மற்றும்/அல்லது பிற நிறுவனங்களால் பணிக்கு நியமிக்கப்பட்ட CLTயை சேர்ந்த இணையாளர்கள் - ஆகியோர்களால் சிறுபான்மை இன சமூகத்தினர்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

சமீப காலத்தில் செய்யப்படக்கூடிய மாறுதல்களுக்காக, குடும்ப உறுப்பினர்களிடையே நடத்தப்பட்ட பொது கண்ணோட்டத்தின் இரண்டுவிதமான மொழிமாற்றங்கள், சாத்தியமாக செயலாற்றும் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டன. தரவுகளை (டேட்டா) பதிவு செய்யும்போது, ஒரு குறிப்பிட்ட கருத்தைக் குறித்த வினாக்களை தவிர்த்து, அதற்கான பதில்களாக விளங்கும் இரண்டு மொழி மாற்றங்களும் ஒப்பிடப்பட்டு, ஒன்றாக இணைக்கப்பட்டன. பொது கணிப்பிடப்பட்ட தரவுகள், SPSS மொழி மாற்றம் 10.5-யை உபயோகித்து, பகுப்பாய்வு செய்யப்பட்டன.

5. ஆறு மையக் குழுக்களின் எண்ணங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன:

   a. குறைகள்/இயலாமைகள் கொண்ட சீன மக்கள் மற்றும் அவர்களுடைய குடும்பங்கள் (பங்கு கொண்டவர்கள் எண்ணிக்கை: 10 தனிநபர்கள் மற்றும்/ அல்லது குடும்ப உறுப்பினர்கள்)
   b. டொராண்டோவில் வாழும் சீன சமூகத்தினருடன் இணைந்து பணியாற்றுவதில் நிபுணத்துவம் பெற்ற, குழந்தைகளுக்கான ஒரு பெரிய மையத்தின் ஊழியர்கள் (பங்கு கொண்டவர்கள் எண்ணிக்கை: 10 சேவை நிபுணர்கள்)
   c. குறைகள்/இயலாமைகள் கொண்ட தமிழ் மக்கள் மற்றும் அவர்களுடைய குடும்பங்கள் (பங்கு கொண்டவர்கள்

எண்ணிக்கை: 20 தனிநபர்கள் மற்றும்/ அல்லது குடும்ப உறுப்பினர்கள்)

d. தமிழர்கள் சேவை நிறுவனங்களின் உறுப்பினர்கள் மற்றும் தமிழ் சமுதாயத்திற்கு சேவைகளை வழங்கும் குறிப்பிட்ட இனத்தை சேராத நிறுவனங்கள் (பங்கு கொண்டவர்கள் எண்ணிக்கை: 11 சேவை நிபுணர்கள்)

e. குறைகள்/இயலாமைகள் கொண்ட தமிழ் மக்கள் மற்றும் அவர்களுடைய குடும்பங்கள் (பங்கு கொண்டவர்கள் எண்ணிக்கை: 4 குடும்ப உறுப்பினர்கள்)

f. சோமாலிகள் சேவை நிறுவனங்களின் உறுப்பினர்கள் மற்றும் சோமாலி சமுதாயத்திற்கு சேவைகளை வழங்கும் குறிப்பிட்ட இனத்தை சேராத நிறுவனங்கள் (பங்கு கொண்டவர்கள் எண்ணிக்கை: சோமாலி சமூகத்தை சேர்ந்த 4 'சமூக பெரியவர்கள்(ஆண்கள்)' )

சீன இனத்தை சேர்ந்த தனிநபர்கள் மற்றும் குடும்பத்தினர்களுடன் நடத்தப்பட்ட கூட்டத்தொடரை தவிர்த்து (இது நிறுவன திட்ட இயக்குநரால் நடத்தப்பட்டது), டொராண்டோவில் வாழும் சமூக பணியாளர்களின் உதவியுடன், ரோஹெர் ஸ்தாபனத்தின் தலைமை ஆராய்ச்சியாளரால், அனைத்து மைய குழுக்களுடனான கூட்டத் தொடர்கள் நடத்தப்பட்டது. டொராண்டோவில் வாழும் சமூகத்தினர்கள் மற்றும் ஆராய்ச்சிக்காக எடுத்துக் கொண்ட மக்கள் இனத்துடன் தொடர்பு கொண்டவர்களிடமிருந்து மையக்குழு பங்கேற்பாளர்கள் கண்டறியப்பட்டு, பங்குபெற அழைக்கப்பட்டனர். மாண்ட்ரீன் சீன மொழி, சோமாலி மற்றும் தமிழ் மொழியில் மொழி மாற்றம் செய்யப்பட்ட சிறிய கடிதங்கள் மற்றும் நேரடியான தொடர்புகள் (உதாரணமாக, நேரடியாக சென்று அழைத்தல், தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் மற்றும் பல., தொடர்புகள்) மூலமாக பங்கேற்பாளர்கள் அழைக்கப்பட்டனர்.

### அ. சிறுபான்மை இன குழுக்களின் பண்புநலன்கள்

சேவை/ஆதரவு/மருத்துவ தொடர்புகளில் நிலவும் நாகரீக வேறுபாடுகளை ஏற்றுக் கொள்வதற்கான வழிகளை விளக்கும் விதமாகவும், மேலும் மாறுபட்ட நாகரீகங்களை கொண்ட மக்களை வரவேற்கவும், மதிப்பளிக்கும் வழியில் செயல்படும் வழிகளை கொண்டதாகவும், ஒரு வளமான இலக்கியத்தை ஆலோசனை நிபுணர்கள் தயாரித்துள்ளனர். இதில் நீண்டகாலமாக மேம்படுத்தப்பட்ட நாகரீக மனோபாவங்கள் மற்றும் உண்மையானவை மற்றும் புதியதாக கனடாவிற்கு வந்துள்ளவர்களின் துன்பங்கள் குறித்தும், ஓர் உண்மைக்கு புறம்பில்லாத கருத்துகள் அடங்கியுள்ளன.

உதாரணமாக, ஒரு வாடிக்கையாளருக்கும், சேவை வழங்குபவருக்கும் இடையே உருவான தொடர்புகள் - ஒரு நிறுவனம் சேவைகளை வழங்குவது போல் மிக முக்கியமானது என்ற கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

புனர்நிர்மாண அணுகுமுறைகளின் வெற்றி என்பது தொடர்புகளின் தரம் மற்றும் எந்த விதத்தில் புனர்நிர்மான தொழில்நுட்பங்கள்

செயல்படுத்தப்படுகின்றன என்பதை பொறுத்தது. தனிப்பட்ட முறையிலான சம்பந்தம், நம்பிக்கை தூண்டுதலுக்கான பொறுப்பு மற்றும் ஒரு தனி நபரின் தனிப்பட்ட தன்மையை மேம்படுத்துதல், தொடர்புமுறைகள் மற்றும் சுற்றுபுற சூழ்நிலையை அறிந்துகொள்ளுதல் அதோடு நோக்கங்களை அடைவதற்கான அவருடைய (அவன் அல்லது அவள்) திறமைகள் மற்றும் புதிய வாய்ப்புகளை உருவாக்கி தருதல் ஆகியவை தேவைப்படுகிறது (பெய்மன்ஸ், 2000)

ஒரு இயல்புநிலையில் உள்ள வாடிக்கையாளருடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்காக செய்யப்படும் முயற்சிகள்/செயல்கள் குறிப்பாக மிக முக்கியமானவை. மேலும் "இதில், செய்திதொடர்பு தடைகள், குடும்பம் மற்றும் தனிப்பட்டவரின் பின்னணி, மற்றும் இன சமுதாயம், வெளிப்படுத்துதல் தொடர்பான தற்போதைய விஷயங்களை கண்டறிதல் தொடர்பான பிரச்சனைகள், தகவல்கள் மற்றும் அறிந்துகொள்ளுதல் ஆகியவை இதில் அடங்கும். சமூக சூழ்நிலை விளைவுகள் மற்றும் தனிப்பட்ட ஒருவரின் உடற்கூறு செயல்பாடுகள் ஆகியவற்றை கருதுவது மதிப்பீடு செய்வதற்கு தேவையாக இருக்கிறது" (இலண்டன் & டிவோர், 1988, 314).

மேலும் உறுதியாக சொல்வோமேயானால், பிறநாடுகளிலிருந்து குடியேறியவர்கள் மற்றும் அகதிகளின் வாழ்வில் தனிப்பட்ட முறையில் ஈடுபடக்கூடிய நிலைக்கு சேவை வழங்குபவர்கள் வருமுன், ஒரு குறிப்பிட்ட சேவை வழங்குபவரை பற்றிய ஓர் அடிப்படை புலமை மற்றும் நம்பிக்கை அவர்களுக்கு இருக்க வேண்டும். ஒரு அடிப்படை நிலையை அறிந்து கொள்ளுதல் இல்லாதபொழுது, குடியேறுதல் அல்லது செயல்முறைகேற்ப ஒத்து போகும் செயல்களுக்கு, ஓர் உறுதுணையாக இருப்பார்கள் என்ற எண்ணத்தில் உதவி செய்யும் நிறுவனங்களை வரவேற்கப்பட மாட்டார்கள். மேற்கண்ட நிபந்தனை, சில நிகழ்ச்சிகளில்/நிலைகளில், செயலை செய்ய போதுமான சக்தி அல்லது குறிப்பிட்ட நிறுவனங்கள் பற்றிய நற்பெயர் அல்லது சேவைகள் தொடர்பானவைகளில் மிகக் குறைவாகவே செயல்புரிகின்றன. உதாரணமாக, ரோஹெர் ஸ்தாபனத்தின் சமீபத்திய ஓர் ஆய்வில், ஒரு மேம்பட்ட நிலையில் குறைகள்/இயலாமைகள் உடைய ஒரு பெண்குழந்தையை உடைய ஒரு குடும்பத்தினர், இத்தகைய உதவி அளிக்கும் சங்கத்தின் சேவைகளை உபயோகப்படுத்திக் கொள்ள மறுத்தனர் ஏனெனில், தங்கள் மகளின் குறைகள்/இயலாமைகள் வெளித் தெரியும் பொழுது, அது அவளுக்கு ஒரு நல்ல வாழ்க்கை துணையை தேர்ந்தெடுப்பதை பாதிக்கும் என்று பயந்தனர். குறைகள்/ இயலாமைகளுக்கான சேவைகளை ஏற்று கொள்ள பயப்படும் இந்த உதாரணம் - பொதுவான ஒன்றுதான். எப்படியெனில், அவர்களின் குடியேறியுள்ள நிலைக்கு ஒரு தீங்கு செய்யக்கூடிய விளைவு ஏற்படக்கூடும் என்ற ஒரு மனோபாவம் மக்களிடையே இருக்கிறது. (தி ரோஹெர் இன்ஸ்டிட்யூட், 2003, 10)

கனடாவிற்கு வந்து தங்குவதற்கு போதுமான அதிர்ஷ்டம் கொண்ட குடும்பங்கள், குறைகள்/இயலாமைகள் கொண்ட ஒரு குழந்தைக்காக, அவர்களின் குடியுரிமை நிலைக்கு தீங்கு ஏற்படக்கூடும் என்பதை

விரும்பமாட்டார்கள். எவ்வாறெனில், ஆதாரங்களை அதிக அளவில் உபயோகிக்கும் ஒருவர் (இந்த ஆய்விற்காக செய்யப்பட்ட பல நேர்காணல்களிலிருந்து கண்டறியப்பட்டதாவது, எந்தவிதத்திலும் குறைகள்/இயலாமைகள் இல்லாத குழந்தைகளை கொண்ட குடும்பத்திற்கு கனடாவில் நுழைய எளிதாக அனுமதி கிடைப்பதுபோல், குறைகள்/இயலாமைகள் உடைய குழந்தைகளை கொண்ட குடும்பங்கள், தங்களுக்கு நுழைய அனுமதி மறுக்கப்படக் கூடும் என்பதால்) என்ற எண்ணத்தில், சில அலுவலக நடவடிக்கையினால், குறைகள்/இயலாமைகள் கொண்ட குடும்ப உறுப்பினர் காணப்பட்டு, தேவையில்லாத கவனத்தை கொண்டு வரக்கூடும் என பயப்படுவார்கள். இந்த எண்ணமானது, கனடாவில் குடியேறியப்பின் பிறந்த குறைகள்/இயலாமைகள் உடைய குழந்தைகளைக் கொண்ட குடும்பத்தினருக்கும் பரவக்கூடும்.

சேவைகளை உபயோகிக்க விருப்பம் இல்லை என்பதைவிட, போதிய ஆங்கில மொழிப் புலமை இல்லாத காரணமும், செயல்திட்டங்களை ஏற்றுக் கொள்ள ஒரு குறிப்பிடத்தக்க தடையாக இருக்கிறது என்பதை அதே ஆய்வு கண்டறிந்துள்ளது. செய்திதொடர்பு பிரச்சனைகள்- "மனத்தை கெடுக்கக்கூடிய மதிப்பீடுகள், கடினமான செய்திபோக்குவரத்துகள், அறிவுறுத்தல்களை அறிந்து கொள்வதில் ஏற்படும் வரையறை, ஒருவர்- அதாவது அவன் அல்லது அவள், தன்னுடைய தாய் மொழியில் எளிதாக பெறக்கூடியவற்றை பெறுவதில் மற்றும் ஒருவரோடு ஒருவர் கலந்து பழகுவதில் ஏற்படும் சிரமங்கள்" ஆகிவற்றிற்கு காரணமாக அமையும். (தி ரோஹெர் இன்ஸ்டிட்யூட், 2003, 16)

இலக்கியத்தில் ஒரு நாகரீக தடை என அடிக்கடி குறிப்பிடப்படுவது, ஐரோப்பா மற்றும் வடக்கு அமெரிக்காவில், தனித்தன்மை மற்றும் சுய மனவுறுதி ஆகியவை வெகுமதி பண்புகளாக கருதப்படுகிறது. அதிக அளவில் குடும்பம் மற்றும் சமூகத்துடன் ஒருங்கிணைந்த தன்மை கொண்ட சிறுபான்மை இனத்தவர்களுக்கு இது இயற்கைக்கு மாறாக இருக்கக்கூடும்.

மக்களுக்கு தேவைப்படும் பலவித சேவைகள் என்று வர்ணிக்கப்பட்ட, *தனிப்பட்ட (எதிரான) பரஸ்பரம் சார்ந்தவைகளை* ஒரு மனிதரின் கருத்துகள் என்ற முறையில் தாம்ஸன் (1997) வெளி உலகிற்கு கொண்டு வந்துள்ளார். தனிப்பட்ட நாகரீகங்கள் எனப்படுபவை ஐக்கிய மாகாணங்களில் உள்ள நடுத்தர வர்க்கங்கள் மேலும் மேற்கு ஐரோப்பா மற்றும் கனடாவில் குறைவாக பரவியுள்ள ஒரே மாதிரியான முறைகளை பின்பற்றுபவர்களால் சுருக்கப்படுகிறது. பரஸ்பர உதவி என்பதை வேறு விதத்தில் கூறுவோமேயானால், ஆசியா, இலத்தீன், அமெரிக்கா மற்றும் ஆப்ரிக்காவில் அதிகாரம் செலுத்தும் நாகரீகங்கள் என்று வர்ணிக்கப்படுகிறது. சேவை வழங்குதல் குறித்த வடக்கு அமெரிக்கர்களின் தத்துவங்கள் - தனித்தன்மை, சுய-ஆதரவு மற்றும் சுய-தீர்மானம் ஆகியவற்றை வலியுறுத்துவதால், "அதிக அளவில் பொதுவுடைமை நாகரீகத்தை பிறப்புரிமை கொண்ட வாடிக்கையாளர்களுக்கு உதவி செய்யும் பொழுது, குறைந்த கட்டுப்பாடு என்ற அளவிலேயே பயன் அளிக்கக்கூடியதாக இருக்கிறது" (16).

குறிப்பாக, பிறநாடுகளிலிருந்து குடியேறுதலுக்கான கடுமையான அரசாங்க அதிகாரத்திற்கு பிறகு, தங்கள் சமூகம் மற்றும் குடும்ப வாழ்வில். வெளிப்புற நிறுவனங்கள் அத்துமீறி குறிக்கிடுதலை இத்தகைய நாகரீகங்கள் பெறும் விஷயமாக எடுத்துக் கொள்கின்றன.

தனிப்பட்ட (எதிரான) பரஸ்பர உதவியை சார்ந்திருக்கிற நாகரீகங்களிடையே அதிக அளவில் பொதுவாக காணப்படக்கூடும் பண்புகளை ஒரு பட்டியலாக தாம்ஸன் (1997) வழங்குகிறார். கீழே காணப்படும் அட்டவணை அவருடைய (அவளுடைய) விளக்கத்திலிருந்து தொகுக்கப்பட்டது.

| தனித்தன்மை/தன்னைதானே சார்ந்திருத்தல் | பொதுவுடைமை/பரஸ்பர உதவி சார்ந்திருத்தல் |
|---|---|
| தனிப்பட்ட எண்ணங்கள், உணர்வுகள் மற்றும் செயல்களை வலியுறுத்தல் | குழுவை குறித்த வெளிப்படையாக தெரியக்கூடிய எண்ணங்கள் மற்றும் தனிப்பட்ட உணர்வுகளை நசுக்குதல்/அழித்தல் |
| தன் நபரின் கூற்று | சேர்ந்த மற்றும் அதற்கு பொருத்தமானவை |
| தனிப்பட்டவரின் சாதனை | குழுவின் நோக்கங்களை மேம்படுத்துதல்/உயர்த்துதல் |
| தனிப்பட்ட முறையில் விதியினை/ ஊழ்வினையை கட்டுப்படுத்துதல் (கட்டுப்பாட்டிற்கான அக நியமம்) | அழிவுகளை அப்படியே எடுத்துக் கொள்ளுதல், ஊழ்வினையில் நம்பிக்கை வைத்திருத்தல் (கட்டுப்பாட்டிற்கான புற நியமம்) |
| தனி நபரின் அங்கீகாரம் = மதிப்பு | குழுவின் ஒற்றுமையை நிர்வகிக்கும் திறமை = மதிப்பு |
| குழுவில் உள்ள மற்ற உறுப்பினர்களை காட்டிலும் மேம்பட்டிருக்க வேண்டும் என்ற போட்டி மனப்பான்மை மற்றும் தனிப்பட்டவரின் தகுதி. | ஒரு குழுவில் தனது இடத்தை உணர்ந்து கொண்டு, ஒற்றுமையாக மற்றும் விட்டு கொடுத்து வாழுதல் |

குறைகள்/இயலாமைகள் உடைய மனிதர்களை கொண்ட சிறுபான்மை சமூகத்தில் உள்ள குடும்பங்களுடன், ஒரு சேவை நிறுவனம் பேச்சு வார்த்தைகள் நடத்தும்பொழுது, இத்தகைய வேறுபாடுகள் பிரச்சனைகளை உண்டுபண்ணுகின்றன. அவற்றில் ஒரு மொழியின் எல்லைக்கு மேலாக மற்றும் அதனை கடந்து (குழுவில் உள்ள வயதான உறுப்பினர்களுடன் அதிக அளவில் உச்சரிக்கப்படுவது) இருப்பவை, குழுவைப் பற்றி மிகக்குறைவாக உணர்ந்து கொண்ட ஒரு ஆலோசகரிடம் குறைந்த அளவே நம்பிக்கை கொள்ளுதல் (குறிப்பாக அவர்கள் அந்த மொழியை அறியவில்லையெனில்); தனிமைப்படுத்தப் பட்ட சூழ்நிலை மற்றும் குழு உறுப்பினர்களிடையே மட்டும் தொடர்பு கொண்டிருத்தல் என்ற நிலையில் வாழும் குடும்பம்; கனடா மற்றும் கனடா நாட்டில் வாழ்பவர்களை குறித்து தனிப்பட்ட நம்பிக்கைகள்

மற்றும் தவறான அபிப்பிராயம் கொண்ட சமூகத்தினர் ஆகியவை அடங்கும் (தி ரோஹெர் இன்ஸ்டிட்யூட், 2003, 16)

அக-குழுக்கள் (எதிரான) புற-குழுக்கள்- இங்கு புற குழுவில் "நாகரீக அதிகாரத்துவம் கொண்ட அனைத்து அல்லது பெரும்பான்மையான உறுப்பினர்களை உள்அடக்கிய" அங்கீகாரம் குறித்த, பொதுவுடைமை குழுக்களின் நடத்தைகள் பற்றியும் தாம்ஸன் (1997, 17) குறிப்பிடுகிறார். வெளிப்புற குழுவின் பிரதிநிதியாக இருந்து கொண்டு சேவை வழங்க முன்வருபவர்களுக்கு, இது உண்மையான தடைகளை உண்டு பண்ணுகிறது. மேலும் இது பொது அளவில், பொது சேவை நிறுவனங்கள் குறித்த தவறான நம்பிக்கைகளை பரவ செய்யக்கூடும்.

தங்களுடைய நிலையை நிலை நிறுத்துக் கொள்ளவதற்கான போராட்டத்தினால் எரிச்சல் அடைந்திருக்கும்போது அல்லது தர்மத்தால் வளரட்டும் எனக் கருதப்பட்ட அல்லது முன்பே சுமை எனக் கருதப்பட்ட ஒரு குழந்தையின் மீது அக்கறை காட்டும்பொழுது, அந்த அதிகார நிலையில் மக்களை காணும்பொழுது உண்டாகும் நாகரீக அதிர்ச்சி/தாக்குதலால், சேவை வழங்குபவர் மற்றும் நுகர்வோர்/வாடிக்கையாளருக்கு இடையேயுள்ள நாகரீக வேறுபாடுகள் காரணமாக எரிச்சலூட்டக்கூடும். நாகரீகத்தில் நன்கு முதிர்ச்சியடையாத நிலையை பெற்ற கனடாவில் வாழும் பெரும்பான்மையான குடும்பங்கள் இந்த பிரச்சனைகளை கொண்டிருக்கக்கூடும். நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் தங்களுடைய குழந்தையை பற்றி கலந்துரையாடும்பொழுது, சில குடும்பங்களுக்கு இந்த விஷயம் ஆச்சர்யமாக இருக்கக்கூடும் என்று ரோஹெர் ஸ்தாபனம் அறிக்கை அளித்துள்ளது. அவர்களுக்கு எதற்காக இந்த உதவி செய்யப்படுகிறது என்பதை குறித்த போதிய கல்வி அறிவு இருக்க வேண்டும். அப்பொழுதுதான் இந்த செயல்பாடுகள் குறித்து ஓர் நம்பிக்கையையும், அவர்களின் பங்கினை உணரச்செய்யும் தன்மையையும் உருவாக்க முடியும் (தி ரோஹெர் இன்ஸ்டிட்யூட், 2003, 24).

சிறுபான்மை இன சமூகத்திலிருந்து வந்த, குறைகள்/ இயலாமைகள் கொண்ட மக்கள், தங்களுக்கு குறைகள்/ இயலாமைகள் இருப்பதை மறைத்து வைப்பது பொதுவாக காணப்படுவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. இச்செயலானது, குறைகள்/ இயலாமைகள் கொண்ட ஒருவர் அவர் இளைஞராகவோ அல்லது முதியவராக இருந்தாலும் அல்லது குறைகள்/ இயலாமைகள் கொண்ட தங்கள் குழந்தையை மறைத்து வைக்க விரும்பும் குடும்பங்கள் ஆகியவற்றில் நிகழ்கிறது. தனிப்பட்ட நபர்கள், தங்களின் செயல்கள் நிறைவேறுவதற்காக இவ்வாறு மறைத்து வைக்கின்றனர்: "[குறைகள்/ இயலாமைகள் மறைத்து வைத்தல்] ஒரு வருத்தம் நிறைந்த பாரமாகும். ஆனால், எதிரிடையான இரண்டு பிரிவாக படிப்படியாக வளர்ந்துள்ளவை-குடியேற்றம் மற்றும் [குறைகள்/ இயலாமைகள்] வேலை தேடும் அவர்கள் வாய்பை அதிகரிக்காது என்று அவர்களுக்கு தெரியும்"(தி ரோஹெர் இன்ஸ்டிட்யூட், 2003, 18).

மறுதலையாக, குறைகள்/ இயலாமைகள் கொண்ட ஒரு இளைய சமுதாயம் (அவர் இளைஞராக *மட்டும்* இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை) தங்களுடைய சொந்த நாட்டின் தத்துவங்களை எடுத்துக்

கொள்ளும்போது, தலைமுறை மாறுபாடுகள் வெளிப்படையாக தெரியக்கூடும்.

> குறைகள்/இயலாமைகள் கொண்ட சில மக்கள், அவர்களுடைய நாகரீகம் அவர்களை உதறிவிட்டக் காரணத்தால், பெரும்பாலும் கனடாக்காரர்களாகவே இருக்க விரும்புகின்றனர். குறைகள்/ இயலாமைகள் கொண்ட பிற நாட்டிலிருந்து குடியேறியவர்கள், அவர்கள் சொந்த சமூகத்தைக் குறித்து குறைவாகவும், மேலும் அவர்களில் சில பேர், அவர்களுடைய சொந்த குடும்பத்தையே ஒரு உண்மையான தடை என்றும் எண்ணுகிறார்கள். (தி ரோஹெர் இன்ஸ்டிட்யூட், 2003, 31).

சிறுபான்மை இன மக்களுக்குள், அவர்களுக்குள்ளும், அவர்களிடையேயும், வேறுபாடுகள் பல கோணத்தில் நிலவுகின்றன. உதாரணமாக, இங்கு ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மூன்று குழுக்களுமே, நாகரீக அதிகாரத்துவம் வாய்ந்த வெள்ளை கனடிய மக்கள் இனத்தோடு தொடர்புடையவர்கள், அவர்கள் அனைவருமே, அவர்களின் நாகரீகத்தால் பாகுபாடு மற்றும் ஒதுக்குதல் செய்யப்பட்டு பாதிக்கப்பட்ட அனுபவங்களை உடையவர்களாக இருந்தனர். அதேசமயம் அவர்கள் யாவரும், அந்த குறிப்பிட்ட குழுவில் இருக்கும் இளைஞர்கள், நடுத்தர வயதுடையவர்கள் மற்றும் முதிய உறுப்பினர்களின் மனோபாவங்களிலிருந்து பெரிதும் மாறுபட்டிருந்தனர்.

உதாரணமாக, சீன இளைஞர்கள், அவர்களுடைய தாத்தாக்களைக் காட்டிலும், அவர்களுக்கு சமமான உயர்நிலை பள்ளி தோழர்கள் கொண்டிருக்கும் பொதுவான பண்புகளை கொண்டிருப்பார்கள். எப்பொழுது குடியேறினார்கள் என்பதன் கால அளவு, அல்லது கனடாவில் ஏற்பட்ட பிறப்பு ஆகியவை இத்தகைய தாக்கத்தை வழங்கியிருக்கக்கூடும். ஸ்யூ & ஸ்யூ (1987, 485) எழுதியது போல், "ஆசியர்கள் அல்லது ஆசிய அமெரிக்கர்கள் என்ற பிரிவில் வகைப்படுத்துவதற்கு முன்பு, அவர்கள் இருக்கும் இடத்தின் நாகரீக பிரிவு இயல்புகளை சேர்த்தே கருத வேண்டும் இல்லையெனில் இது அவர்களைப் பற்றிய தவறான முடிவுகளையே தரும்." [1]

வெள்ளை இன பெரும்பான்மையினருடன், ஒரு குறிப்பிட்ட சிறுபான்மை இனத்தவர்கள் கொண்டுள்ள உறவு முறைகளை பொருத்து, அவர்களின் இனத்துக்குள்ளேயே பிரிவு கோடுகள் இருக்கக் கூடும். இலக்கியத்தை ஆதாரமாகக் கொண்டு முடிவெடுத்தல், அதாவது கனடாவில் வாழும் பெரும்பான்மையான தமிழ் இனப் பரம்பரையினர் இந்தியாவில் உள்ள தமிழ் நாட்டைக் காட்டிலும், இலங்கையை தாயகமாக கொண்டவர்கள் என்ற நோக்கில் கணக்கிட்டு, அவர்கள் எப்போதும் இலங்கையில் பெரும்பான்மையாக உள்ள சிங்களத்தவருடன் சண்டையிட மற்றும் அவர்களுக்கு எதிரான மனோபாவத்தை கொண்டிருப்பார்கள் என்று அந்த இனத்தை பொறுத்து பாகுபாடு செய்யக்கூடாது. கனடாவில் இருக்கும் சோமாலி மக்கள் தொகையினரை மேம்போக்காக

---

[1] ஹோவார்ட்-ஹாமில்டன் (d/u)-வையும் காணவும்

பார்த்தோமேயானால் அவர்கள் அனைவருமே ஒரே இயல்புகளை (பொதுவான அரசாங்க மொழி மற்றும் மதத்தை கொண்டிருத்தல், உள்நாட்டு போர் தொடர்புடைய வரலாறு மற்றும் இடப்பெயர்ச்சி) கொண்டிருப்பார்கள், ஆனால் அவர்களின் பரம்பரை/பழங்குடிக்கான விசுவாசம், உண்மையான [(எதிரான) உத்தியோ பூர்வமான] மொழி, மேலும் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளை தாயகமாக கொண்டிருத்தல் (இது பாரம்பரிய விசுவாசத்தினால் இணைக்கப்பட்டது) போன்றவற்றில் மாறுபாடு உடையவர்களாக இருக்கிறார்கள் என்பதே உண்மை. டொராண்டோவில் இருக்கும் சீனத்தவர்கள் - சீனாவின் முக்கிய பகுதியை சேர்ந்த பல்வேறு பகுதிகள், ஹாங்க்-காங்க், தைவான் மேலும் உலகின் எண்ணிலடங்காத பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து குடியேறிய சீன இனத்தவர் - போன்ற பல பகுதிகளை பரம்பரைக்கான தாயகமாக கொண்டவர்கள்.

வேறுவிதத்தில் சொல்வதானால், ஒரு இனத்தின் தாயகத்தில் நிலவும் உள்-நாகரீக வித்தியாசங்கள், கனடாவில் வாழும் அந்த இனத்திற்கு பொருந்தாது. உதாரணமாக, நேர்காணலில் பங்கு கொண்ட ஒரு பிரதிவாதி கருத்துரைத்ததாவது - பல ஆண்டுகளாக, வடக்கு (எதிரான) தெற்கு பகுதிகளை சேர்ந்தவர்கள் என்று வேறுபடுத்தி பார்க்கப்படுகிறார்கள். இந்த வேறுபாட்டினை, அவர்கள் அந்த நாட்டிலிருந்து கனடா போன்ற பிற நாடுகளில் குடியேறும்பொழுதும் தொடரும் முதல் பிரச்சனையாக உள்ளது ("கடந்த இரு வருடங்களாக அந்த சமூகத்தினர் தங்களுக்குள்ளேயே சண்டையிட்டுக் கொள்கின்றானர்" என்று அந்த இனத்தைப் பற்றி குறிப்பிட்டு காட்டப்பட்டது) ஆனால், இப்பொழுது, அவர்கள் தங்களின் வேறுபாடுகளை மறந்து, வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளை சார்ந்த குழுக்கள் தங்களிடையே ஓர் ஆதார இணைப்பை கொண்டிருப்பதை காண்கிறோம். உதாரணமாக, தெற்குபகுதியை சேர்ந்தவர்களின் வரையறைகள் குறித்து வடக்கு பகுதியை சேர்ந்த சோமாலிகள் தங்களுக்குள் 'தன்னுணர்ச்சி ' ஹாஸ்யங்களை கூறிகொள்வது வழக்கம். அதேபோல், வடக்கு இனத்தவரை குறித்து தெற்கு பகுதியை சேர்ந்தவர்கள் ஹாஸ்யங்களை பரிமாறிக் கொள்வார்கள் என்றாலும், இப்பொழுதெல்லாம் இந்த ஹாஸ்யங்களை ஒரு களஞ்சியம் போல் நினைத்து, அவர்கள் இரு இனத்தவரும் தங்களை பற்றிய வரலாற்று செய்தி என்பது போல், பரிமாறி மகிழ்ந்து கொள்கிறார்கள்.

## A. சேவை வழங்குபவர்களின் பண்பு நலன்கள்

ஐக்கிய மாகாணங்களில் புனர்நிர்மான சேவைகள் குறித்த ஓர் சமீபத்திய ஆய்வு தெரிவித்ததாவது - " நாகரீகத்தால் மாறுபட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட புனர்நிர்மான சேவைகளை குறித்த புள்ளி விவரத்தின்படி, புனர்நிர்மான சேவை செய்வதாக கூறிக் கொண்டு, வெற்றிபெற இயலாத நிலையில் இருப்பவர்களின் எண்ணிக்கை கணக்கிட முடியாத அளவில் உள்ளது. குறிப்பாக, குறைகள்/ இயலாமைகள் கொண்ட ஒரு குறிப்பிட்ட நாகரீக குழுக்களை சார்ந்த மக்களில் பெரும்பான்மையோர் புனர் நிர்மான சேவைகளை ஏற்றுக் கொள்ளாத அல்லது ஒத்துபோகாத குணம் உடையவர்களாக இருப்பார்கள்" என்னும் அதிக அளவிலான நிகழ்தகவு

கொண்டதாக இருக்கிறது (வாங்க்-ஹெர்மான்டெஸ் & வாங்க், 2002, 101,).

இதன் ஆசிரியர்கள் தெளிவாக குறிப்பிடுவதாவது, “புனர்நிர்மான தொழில் தொடர்பானவர்கள் அதிக திறமை வாய்ந்தவர்களாக விளங்குவதற்கு, அவர்கள் பலவித நாகரீக விஷயங்கள் குறித்து அறிந்தவர்களாக இருக்க வேண்டும்.. ..” மேலும் “சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த தனிநபர்களின் நாகரீக மதிப்புகளை அங்கீகரிக்க கற்றுக் கொள்கிற மற்றும் அதன்படி சேவை அணுகுமுறைகளை மாற்றி அமைத்துக் கொள்ளக்கூடியவர்களா” தற்போதைய ஊழியர்கள் இருக்க வேண்டும் மேலும் நாகரீக முற்போக்கு சிந்தனை உடையவர்களை அதிக அளிவில் நியமிக்க வேண்டியது தேவையாக இருக்கிறது என்றும் வலியுறுத்துகிறார்கள் (வாங்க்-ஹெர்மான்டெஸ் & வாங்க், 2002, 101, 117).

சேவை வழங்குபவர்கள் பல சமயங்களில், “பல நாடுகளிலிருந்து குடியேறியவர்களின் குறிப்பிட்ட தேவைகளை அறிந்து கொள்ள இயலாதவர்களாக, ஏன் நகரங்களில்கூட குறிப்பிட்ட சமூக இனத்தை சார்ந்தவர்களாக மேலும்/அல்லது எந்த நாட்டிலிருந்து குடியேறிய சிறுபான்மையினத்தவர் என்றெல்லாம் பாகுபடித்தி காண்கிறார்கள்” என்பது போன்ற விஷயங்களை ரோஹெர் ஸ்தாபனம் கேள்வி பட்டுள்ளது (தி ரோஹெர் இன்ஸ்டிட்யூட், 2003,39). இவ்வாறான குறிப்பிட்ட தேவைகளில் இனம், மொழி, நாகரீகம் மற்றும் மதம் பற்றிய பரஸ்பர கருத்துகளும் உள்ளடங்கியுள்ளன.

உதாரணமாக, வேறு நாட்டிலிருந்து குடியேறிய முதல் தலைமுறையைச் சார்ந்த ஒரு முதிய பெண்மணியின் தேவைகளுக்கான அணுகுமுறை, பல தலைமுறைகளுக்கு பிறகான இத்தாலியன் அல்லது உக்ரெய்னியன் கனடாக்காரர்களின் தேவைகளிலிருந்து பெரிதும் மாறுபாடுகிறது. சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் மற்றும் அவர்களுடைய புதிய நாகரீக சூழ்நிலைகள் ஆகியவற்றிற்கு இடையேயான பரஸ்பர உணர்வுகள், உதவி வேண்டக்கூடிய நடவடிக்கைகளை தடுக்கக்கூடியதாக இருக்கக்கூடும். மேலும், இது புதியதாக வந்தவர்கள் அல்லது குழுவிலிருந்து வெளியேறியவர்களின் நிலையை உணர்ந்தவர்களை கொண்டவர்களை விட ஒரு குறிப்பிட்ட நாகரீக பின்னணி கொண்டவர்களுக்கு குறைவான செயல்புரிவதாக மட்டுமே அமையும்.

இத்தகைய வேறுபாடுகளை பிரச்சனைகள் என்று நோக்கில் காண்பதைவிட, சிறுபான்மை இன சமூகத்தினர்கள் தங்களை கண்டிப்பாக மாற்றிக் கொள்ள வேண்டும் என்ற நோக்கில் காண வேண்டும். பல ஆய்வுகளிலிருந்து, இத்தகைய மாறுபாடுகள் கொண்ட தேவைகளை ஏற்றுக் கொள்வது/இடம்பெற செய்வது சேவை நிறுவனங்களின் பொறுப்புகளாக இருக்க வேண்டும் என்பதோடு மட்டுமல்லாமல், இயற்கையாக அமைந்த கொடுத்தல்-வாங்கல் முறை வழியாக ஒரு சேவை தொடர்பினை இத்தகைய மக்கள் இனத்தவர் பெறுவதற்காக போதிய

கல்வி அறிவை பெறும் விதத்தில் சேவை நிறுவனங்கள் வேலை செய்ய வேண்டும்.

வாங்க், செட்லெசீக் & வெஸ்ட்ப்ரூக் (2001) எழுதுவதாவது:

> சிறுபான்மை இன குழுக்களின் பண்பு நலன்கள் குறித்த கற்பனை கருத்துகள், சுய நிறைவேறுதல்களின் தீர்க்க தரிசனமாகவே இருக்கிறது. வேறு நாகரீக குழுக்களை சேர்ந்தவராக ஒரு வாடிக்கையாளர் இருந்தாலும், தன்னை வெளிப்படுத்திக் கொள்ள இயலாதவர்களாகவும், சார்ந்திருப்பவர்களாகவும், கட்டமைப்பு தேவை என கருதுபவர்களாகவும், வழிநடத்தல், ஆலோசனை இன்னும் பல குணங்களை உடையவர்களாக இருப்பார்கள் என நம்பப்படுகிறார்கள். இத்தகைய குணங்கள் யாவும் உண்மை என்ற விதத்திலேயே கருதி நடத்தப்படுவார்கள். மேலும், அவர்கள் ஆலோசகரின் நம்பிக்கையினை உறுதி செய்யும் முறையை பிரதிபலிப்பவர்களாக இருப்பார்கள். இதிலிருந்தி நிலையான மற்றும் பாரம்பரியமாக பின்பற்றக்கூடிய அணுகுமுறைகள் மிகச் சிறப்பானதாக அமையாது என்பது உறுதிபடுத்தப்படுகிறது.

ரோஹெர் ஸ்தாபனத்தின் முந்தைய ஆய்வில் பங்கு பெற்ற குறைகள்/இயலாமைகளுக்கான சேவை நிறுவனத்தைச் சேர்ந்தவர் "அனைத்து பொருள்களும் அனைத்து மக்களுக்கு" என்பதை பற்றி கூறியுள்ளார். அவர் (அவள்) நினைப்பதாவது, நாகரீக தடைகளை அறிந்து கொள்வதில் ஏற்பட்ட குறைபாட்டின் காரணமாக, அவருடைய நிறுவனம், நாகரீக பண்புகளை குறித்த திறமை வாய்ந்த வேறொரு குழுவிடம், வாடிக்கையாளர்களை ஆலோசனைக்கு அனுப்பக்கூடியதாக இருக்க வேண்டும். எனினும், பல சமயங்களில் இத்தகைய குழுக்களில் குறைகள்/இயலாமைகள் குறித்த திறமையாளர்கள் இருப்பதில்லை (தி ரோஹெர் இன்ஸ்டிட்யூட், 2003,11). குறைகள்/இயலாமைகளை அடிப்படையாக கொண்டவர்கள் மற்றும் பிற நாடுகளிலிருந்து குடியேறுதல்/குறிப்பிட்ட சிறுபான்மை இனத்திற்காக சேவை செய்ய வந்தவர்கள் ஆகிய இரு சாரார்களுக்கும் இடையேயுள்ல தொடர்புகளுக்காக இந்த அறிகுறிகள் தேவையாக இருக்கிறது. இவ்விரு சாரார்களும், தகவல்கள் மற்றும் வேலை பளுக்களை பகிர்ந்து கொள்பவர்களாக இருக்க வேண்டும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள கலந்துரையாட போகும் விஷயங்களின்படி, டொராண்டோவில் வாழும் சமூகத்தினர், சிறுபான்மை இன சமூகங்களுடன் தொடர்பு ஏற்படுத்தி கொள்ளும்போது எதிர்கொள்ளக் கூடிய பிரச்சனைகளுக்கு, அடிக்கடி குறிப்பிடப்படும் தீர்வாக அமைய, நிறுவனங்களுக்கிடையே ஏற்படும் கூட்டுறவுகளுக்காக இது தேவையாக உள்ளது

இந்த ஆய்வு முழுமைக்கும், சேவைகளை வழங்குவதில் பங்கு கொள்கிற நிறுவனங்கள், அவரவர் முறைகளில் உள்ள குறைபாடுகளை தெளிவாக அறிந்திருக்கிறார்கள் என்பது தெரிய வந்துள்ளது. எனினும், தவறான கண்ணோட்டங்கள் மற்றும் தவறான நம்பிக்கைகள் முழுமையாக நீங்காத நிலையிலும், மாறுபட்ட கலாச்சாரங்களின் பெரும்பான்மையான

பகுதிகளை அனுமானத்தின் மூலம் அறிய முயற்சி செய்யும் நல்ல நம்பிக்கை கொண்டவைகளாக இவை இருக்கின்றன. இந்த திட்டத்தை தொடங்குவதற்கான எண்ணம்/ விருப்பம்கூட நல்ல நம்பிக்கையை வெளிப்படுத்தக்கூடியதாகவும், மாறுதல்களை அறிந்து கொள்ளும் ஓர் முயற்சியாகவும் இருக்கிறது.

இந்த திட்டத்தை தொடங்கும்போதே, ஓர் உரையாளர் மறுத்து கூறியதாவது, இந்த திட்டமானது நாகரீகத்தின் நுட்பமான வழிகளை அணுகுவதற்கான சேவைகளை செய்வதற்கும், எளிதில் அணுக முடியாதவர்கள்/விடுபட்டுள்ளவர்களை செயலில் ஈடுபடுத்துவதற்கு சேவை நிறுவனங்களுக்கு தேவையாக இருப்பவைகளை எடுத்துக் காட்டுவதைக் காட்டிலும், சிறுபான்மை இன சமூகங்களை குறித்தே அதிக அளவில் மையப்படுத்தி காட்டுகிறது. அவரின் விமர்சனத்திற்கு பதிலளிக்கும் விதமாக, (1) டொராண்டோவில் வாழும் சமூகத்தினர் பலவித நாகரீகங்களை அறிந்து கொள்ள ஓர் வாய்ப்பு அளிப்பதன்மூலம், அவர்களுக்கு நல்ல சேவையை வழங்க முடியும் என்பதற்காக; (2) உள்-நிறுவனங்களின் கற்றுக்கொள்வதற்கான வரம்பினை அடிப்படையாகக்கொண்டு அணுக முடியாதவர்கள்/ விடுபட்டுள்ளவர்களை அணுகவதற்கான முறையாகவும், இந்த திட்டமானது இருக்கிறது. இந்த திட்டம் முழுமைக்கும் வலியுறுத்தப்படுவதாவது, டொராண்டோவில் உள்ள சமூக சேவை அமைப்புகளுடன், சிறுபான்மை இனத்தவர்களுக்கு ஏற்படுகிற அனுபவங்களை மையப்படுத்தும் விதமாக இந்த திட்டம் இருக்கிறது என்பதாகும்.

### A. டொராண்டோவில் வாழும் தமிழ் சமூகத்தினர்

டொராண்டோவில் இருக்கும் சோமாலிகள் போலவே - இலங்கையை சேர்ந்த தமிழ் இன மக்கள், சேவை/ஆதரவு வழங்குபவர்கள் மற்றும் ஸ்தாபிக்கப்பட்ட நிறுவனங்களோடு ஈடுபடுத்துபவர்களுக்கு எந்த விதத்திலும் புதியவர்களில்லை. ஸ்கர்பாரோவில் உள்ள (அதாவது சமூக இன வயதானவர்களுக்கான திட்டம்) மற்றும் மவுண்ட் சின்னையில் உள்ள யுனிவர்சிட்டி அவென்யூ (அதாவது சமூக செயல்பாட்டினை வலியுறுத்தும் குழு) ஆகிய இரண்டிலும், மருத்துவமனையை அடிப்படையாக கொண்ட செயல்திட்டங்களில் குறிப்பிடும்படியான கூட்டாளிகளாக தமிழ் மக்கள் இருக்கின்றனர்.

இதனுடன்கூட, கனடியன் தமிழ் காங்கிரஸ், ஈழ தமிழ் சங்கம், கனடிய தமிழ் பெண்களுக்கான சமூக சேவைகள் மற்றும் டொராண்டோவில் வாழும் தமிழ் முதியவர்களுக்கான நிறுவனம் போன்ற சமூக குழுக்களோடு, தமிழ் சமுதாயத்தினர் ஒரு துடிப்பான இணைய தள சேவையை www.tamileelamnews.com மற்றும் www.tamilcanadian.com கொண்டுள்ளனர்.

### 1. *இலக்கிய மதிப்புரை*

டொராண்டோவில் வாழும் தமிழர்களின் எண்ணிக்கை குறித்த கணிப்புகள் பரவலாக மாறுபடுகிறது. ஆசிய வானொலியின்படி (ரேடியோ ஆசியா) மக்கள் தொகையானது 130,000-க்கும் மேல் (CRTC 1998); மற்றொரு ஆதாரத்தின்படி மதிப்பீடு செய்யப்பட்டதாவது 1994-ல் எண்ணிக்கை 73,000-க்கும் மேல் (அருளய்யா, d/u). கனடாவின் புள்ளியியல் விவரத்தின்படி, 2001-ல் டொராண்டோவில் தமிழ் இன மக்களின் எண்ணிக்கை 33,145 (தமிழ் கலப்பினத்தவர் மற்றும் மற்ற இடத்தை பிறப்பிடமாக கொண்டவர்கள்) மற்றும் 23.170 (தமிழ் நாட்டில் பிறந்தவர்கள்). பெரும்பான்மை அளவில் அவர்கள் வசிக்கும் இடங்கள்: ஸ்கார்பாரோ, வடக்கு மிஸ்ஸிஸ்சவ்கா, மற்றும் நகரின் வணிக அலுவலகங்கள் நிறைந்த பகுதியில் குடியிருப்பைக் கொண்டவர்கள்.[2]

### *a. சேவை காரியாலயங்கள் மற்றும் நிறுவனங்களுடனான வேலை மற்றும் நிர்ணயிக்கப்பட்ட சந்திப்பு*

கனடாவின் ஆரோக்கியம் (2003) ஆரோக்கிய பாதுகாப்பு வலைபின்னல் அறிக்கையின்படி, இங்கு வாழும் தமிழர்கள், அவர்களின் தாயகத்தில் இருந்தபோது பல உறவினர்கள் மற்றும் நண்பர்கள் குடும்பங்களின் ஆதரவை பெற்றிருந்திருக்கின்றனர். ஆனால் கனடாவிற்கு வந்த பிறகு, அத்தகைய தனிநபர்கள் மற்றும் குடும்பங்கள் தனித்து விடப்படுவதால் (ஆதரவற்ற நிலை) "தங்கள் குழந்தைகளை மருத்துவரிடம் எடுத்து செல்வதில் அல்லது தங்கள் தனிமையுணர்வை எடுத்துக் கூறுவதில் ஏற்படும் பய உணர்வு" போன்ற காரணங்களால், அடிக்கடி *ஆதரவு-அதிர்ச்சிக்கு* உள்ளாகிறார்கள். தொலைதூர முறை/ எளிதில் அணுக முடியாதவர்களை அணுகும் முறை உபயோகம் மற்றும் விளக்கப் படங்கள், எளிய மொழியாக்கம் ஆகியவற்றை உபயோகித்து உருவாக்கப்பட்ட குறிப்பிட்ட மொழிக்கான கையேடுகள்/பிரசுரங்கள் போன்றவை அந்த மக்களை, ஆரோக்கிய சேவை ஸ்தாபனங்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள உதவுகின்றன.

அதே சமயம், இந்த மக்கள் 'தங்கள் இனத்தை சார்ந்தவர்கள்' என்ற பிடிப்பிலிருந்து விலகி 'கனடாவில் வாழும் சமூகத்தவர்கள்' என்ற நிலைக்கு மாறியுள்ளனர். டொராண்டோ மற்றும் ஸ்கார்பாரோ-வில் வாழும் தமிழ் சமுதாயத்தினர்களால் உருவாக்கப்பட்ட, பன்மடங்கு வளர்ச்சிபெற்ற இணையதளங்களை கொண்டு தீர்மானிக்கும்பொழுது, இந்த பிரிவு மக்கள் எந்த விதத்திலும் சமுதாய அமைப்புகள் மற்றும் அக-குழு உறுப்பினர்களுக்கு சேவைகளை வழங்கும் அமைப்புகளுக்கு புதியவர்கள் இல்லை என்பது விளங்கும். உதாரணமாக, கனடா-ஈழ தமிழ் சங்கம் [Tamil Eelam Society of Canada (TESOC)], 1978-ல் நிறுவப்பட்டது. 12 உறுப்பினர்கள் கொண்ட நிர்வாக இயக்குநர்கள் சபையை கொண்டுள்ள இது, தற்போது டொராண்டோவில் 4 இடங்களில் அலுவலகங்களை கொண்டுள்ளது. கனடா-குடியேற்ற உரிமை பெற்றவர்கள், பிற நாடுகளிலிருந்து குடியேறியவர்கள் மற்றும்

---

[2] ஆதாரம்: கனடா புள்ளியியல், 2001, கனடியன் மக்கள் தொகை அட்டவணைகள், அட்டவணை 97F0010XCB01001; மக்கள் தொகை நிறைந்த இடங்களை காண: www.city.toronto.on.ca/ourcity/images/profile2_map4.gif

டொராண்டோ நகரம் ஆகியவற்றிலிருந்து இந்த சங்கத்திற்கு நிதிவுதவி கிடைக்கிறது. பணி நியமனம், புதியதாக கனடாவில் குடியேறியவர்களுக்கான மொழி வழிகாட்டல், குடியேற்றம் மற்றும் சேவைகளுக்கேற்ப தங்களை மாற்றி அமைத்து கொள்ளுதல் போன்றவற்றிற்கு வழிகாட்டுதலே அந்த சங்கத்தின் முக்கிய திட்டங்களாகும். இவற்றுடன் அவர்கள் 'தன்னிச்சையான சேவைகள்' மற்றும் ஆலோசனைகளையும் வழங்கி வருகிறார்கள் என்றாலும், குறைகள்/இயலாமைகளுக்கான ஆதரவுகள், குறைகள்/இயலாமைகள் கொண்டவர்களுக்கான ஆதரவுகள் ஆகியவை தெளிவாக வகைப்படுத்தும் விதமாக அவர்கள் 'கண்காணிப்பு அமைப்பில்' (ரேடார்) இல்லை என்றே தோன்றுகிறது.

ஸ்கார்பாரோ மருத்துவமனையின், தமிழ் பெண்களுக்கான கருவளர்ச்சியில்-நீரழிவு செயல்திட்ட ஆதாரத்தின்படி, தமிழ் சமூகத்தினரின் தேவைகளை பிரதிபலிக்கும் விதமாக இந்த மருத்துவ மனை இருக்கிறது என்று தெரிய வருகிறது. சுய உதவி ஆதார நிலையம், கனடியன் நீரழிவு சங்கம், மற்றும் கிழக்கு டொராண்டோவின் நீரழிவு குறித்த கல்விக்கான சமுதாய வலைபின்னல் ஆகியவற்றின் ஆதரவினால் இயங்கும் ஈழ தமிழ் சங்கத்தினால் இந்த செயல்திட்டம் நிர்வகிக்கப்படுகிறது (கனடா நியூஸ் வைர், 2003). மேலும், கிழக்கு டொராண்டோவில் உள்ள முன் ஜாக்கிரதை நல மையத்தின் தமிழர் பாதுகாப்பு திட்டமும் இந்த விஷயத்தில் ஆர்வம் காட்டுகிறது. [3]

வெளிநாட்டில் பயிற்சி பெற்ற மருத்துவ நிபுணர்களுக்காக, ஆரோக்கிய பாதுகாப்பின் எதிர்காலம், அணுகுமுறை முக்கியத்துவம் மற்றும் சேவைகளில் பாரபட்சமின்மை மற்றும் சான்றளிக்கப்பட்ட தேவைகள் ஆகியவற்றின் மீதான ரோமானவ் அதிகாரகுழுவின் சமுதாய நல பொதுமன்ற விவாதங்களில், கனடியன் தமிழ் காங்கிரஸ் வழியான ஸ்கார்பாரோ தமிழ் மக்களினத்தவர்கள் ஈடுபட்டுள்ளனர். ஒரு மருத்துவர் கூறியதாவது, ஆரோக்கிய நல சேவைகளை உபயோகப்படுத்துவதில் தமிழ் சமுதாயத்தினருக்கு உள்ள இரண்டு தடைகளாவன: அவர்களுக்கு கிடைக்கக்கூடிய சேவைகள் எவை என்பது குறித்த போதிய அறிவுடை நிலை இல்லாமை மற்றும் ஆரோக்கிய தொடர்பான செயல்முறைகளை எதிர்கொள்ள போதிய ஆங்கில மொழி திறமை இல்லாமை என்பதாகும். நீரழிவு நோய்க்கான சமச்சீர் உணவு மற்றும் சத்துணவு (இந்த மக்களினத்தவர்களின் பெரும்பான்மையாளர்களின் நல விஷயமாக இருக்கக்கூடியது), பிரசவத்திற்கு முந்திய நிலைக்கான வகுப்புகள், மருத்துவ உதவியாளர்கள் தொடர்பான சேவைகள், சமூக பணியாளர்கள், உடல்கூறு நோய் குணப்படுத்துபவர்கள், செவிலியர்கள் மற்றும் மனோ தத்துவ நிபுணர்கள் போன்ற துறைகளில் தமிழ் பேசக்கூடிய சேவை வழங்குபவர்கள் போதிய அளவில் இல்லை என்பதே ஒரு முக்கிய குறையாக உள்ளது. ஆரோக்கிய செயல்முறை எதிர்தாக்குதல் என்பது குறித்து சமுதாயத்தினருக்கு தெரிவிப்பதை காட்டிலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து தெரிவிப்பதே

---

[3] தகவல்களுக்காக, http://www.providence.on.ca/programs_ccentre_tamil.asp என்ற வலைதளத்தை பார்க்கவும்

தேவையாக உள்ளது என்று இந்த மருத்துவர் மேலும் வலியுறுத்துகிறார் (TamilCanadian.com, 2002).

தமிழ் பெண்களின் உடல் மற்றும் மன ஆரோக்கியம் குறித்தே, சமுதாய ஆரோக்கிய மன்றத்தில் நடந்த மற்ற கலந்துரையாடல்கள் இருந்தன. தங்களுக்கு வயதாகிவிட்டது என்ற மன அழுத்தத்திலிருந்து தமிழ் இன முதியவர்களை தடுத்து மேம்படுத்த வேண்டியது தேவையாக உள்ளது என்ற கலந்துரையாடலும் இருந்தது. “கனடாவில் தங்களுடைய பங்கின் மதிப்பிழப்பு” என்பதற்கு எதிராக உரையாளர்கள் பேசினார்கள். மேலும் முதியவர்கள் மற்றும் உயர்ந்த சமுதாயத்தினர் ஆகியோர்களுக்கு இடையேயான விஷயங்கள் குறித்தும் நன்மையளிக்கும் கலந்துரையாடல் நடைபெற்றது. இத்தகைய மனோபாவங்கள், மற்றும் மன ஆரோக்கியம் தொடர்பான்வைகள், பாரம்பரிய முறையினால் அழுத்தப்பட்ட மக்களை சமுதாயத்தின் மேம்படுத்தப்பட்ட/புற எல்லைக்குள் சேர்ப்பது குறித்தும் வெளிப்படையான காட்சி காட்டப்பட்டன.

பிற நாட்டிலிருந்து குடியேறிய தமிழ் பெண்களில், 50 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு ஏற்படக்கூடிய மார்பக புற்றுநோய் குறித்து ஆய்ந்தறிதல் நடவடிக்கைகள் பற்றி நான்கில் ஆராய்ச்சியாளர்களில், டொராண்டோவை சேர்ந்த மூன்று பேர்களை (மெய்னா எட்.அல்., 2001) கொண்டு நடந்த ஓர் சமீபத்திய ஆய்வில் எடுத்துக் காட்டப்பட்டன. குறைகள்/இயலாமைகள் கொண்டவர்களில், பலவீனமானவர்களை மட்டும் எடுத்துக் கொண்ட ஆய்வு போல தோன்றினாலும், இதன்மூலம் தமிழ் குழுக்கள் மற்றும் கனடியன் ஆராக்கியம் மற்றும் சமூக சேவைகளுக்கு இடையேயான தொடர்புநிலை குறித்த ஓர் ஆழ்ந்த அறிவுநிலையை வழங்குவதாக இருக்கிறது.

இந்த ஆய்வின் ஆசிரியர்கள் மேலும் கண்டறிந்ததாவது, அதிக நிலையிலான கல்வி அறிவு பெற்றவர்கள், இந்த நாட்டில் நீண்டகாலம் இருந்திருக்கின்றனர். மேலும் மற்ற தமிழ் பெண்களைக்காட்டிலும், அதிக அளவில் நாகரீக மனப்பான்மையில் இருப்பவர்களில் பெரும்பான்மையோர், மார்பக புற்றுநோயை எடுத்துக்காட்டும் ஒரு ஊடுகதிர் படத்தையாவது பெற்றிருக்கின்றனர் (இது சுயின் - லியூ ஆசியன் சுய-அடையாள நாகரீக வளர்ச்சியை காட்டும் அளவுகோல் மூலம் அளக்கப்பட்டது). இருந்தபோதிலும், மார்பக புற்றுநோயை கண்டறிவதற்கான மார்பு ஊடுகதிர்ப்படத்தின் சேவைகளை உபயோகப்படுத்துவதன் மிக முக்கியமான காரணி, "மார்பை சுய-பரிசோதனைக்கு உட்படுத்துவதில் இருக்கும் தடைகளை அறியும் சக்தி, மேலும், குறிப்பாக, மார்பு ஊடுகதிர்படத்துக்கு - இந்த ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட தடைகளாவன: சோதனையின் சங்கடம் தரும் இயல்பு, மார்பு ஊடுகதிர்படத்தின் காலம் எடுத்துக் கொள்ளும் நிலை, சோதனை செய்து கொள்ளும்போது வலி எடுக்கக்கூடும் என்ற பயம் மற்றும் செலவு ஆகியவை அடங்கும். நோயின் வேகத்தை தடை செய்வதாக கருதப்படும், செலவினை தவிர்தோமேயானால், இத்தகைய தடைகள் யாவும் மனோதத்துவ இயல்பை கொண்டதாகும்" (மெய்னா எட்.அல் 2001, 186)

b. *குறைகள்/இயலாமைகள் குறித்த நம்பிக்கைகள் மற்றும் மனோபாவ போக்குகள்*

தமிழ் நாகரீகத்தில் குறைகள்/இயலாமைகளை அறியும் சக்தி குறித்து மிகக்குறைந்த அளவே ஆய்வுகள் அல்லது கலந்துரையாடல்கள் உள்ளன. தற்போதைய ஆராய்ச்சியின்போது கண்டறியப்பட்ட ஒரே ஒரு குறிப்பிட்ட ஆய்வானது பாக்ஹெய்ட் & சண்முகலிங்கம் (1997) என்பது மட்டுமே. இது அதிகாரத்தினால் அடக்கப்பட்ட கிராமபுற தமிழ் இந்திய சமூகத்தை பற்றியது. இந்த ஆய்வு கண்டறிந்ததாவது, 82% பிரதிவாதிகள் "குறைகள்/இயலாமைகள் கொண்ட மக்கள் குறித்து ஒரு நேரிடையான மனோபாவத்தை காட்டுகின்றனர்" (329) மற்ற பிரதிநிதிகள், அதிலும் குறிப்பாக வயதானவர்கள், குறைந்த அளவே நேரிடையான எண்ணத்தை கொண்டிருப்பதாக தெரிகிறது. இங்கு ஆசிரியர்கள் "குறைகள்/ இயலாமைகள்" என்று குறிப்பிடும்போது, உடல்கூறுகளில் உண்டானவற்றை, அதில் பெரும்பாலும் அடங்குபவை: "வயோதிக முடக்கு வாதம், எலும்பு முறிவுகள் அல்லது கை, கால்கள் போன்ற உறுப்புகள் துண்டிக்கப்பட்டிருத்தல். ஒரு சில நோயாளிகள் முதுகெலும்பு காயங்களை கொண்டிருந்தனர்" (331). ஏதேனும் குறைகள்/இயலாமைகளை உணரும் விதத்தில், பகுத்தறிவதற்காக செய்யப்படும் ஆய்வுகளில் ஒன்று என்று இது கொடுக்கப்பட்டிருந்தாலும், மனம் தொடர்பான குறைகள்/ இயலாமைகள் கொண்ட மக்களை எப்படி தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்வார்கள்/அணுகுவார்கள் என்பதை அறிந்து கொள்வது மிகவும் கடினம். தொழுநோய் போன்று மிக வெளிப்படையாக தெரியும் குறைகள்/ இயலாமைகள் கொண்டவர்களைவிட, எளிதில் கண்டறியவியலாத குறைகள்/ இயலாமைகள் கொண்டவர்கள் பெருமளவில் ஏற்றுக் கொள்ளப் படுகிறார்கள் என்பதை இந்த ஆசிரியர்கள் குறிப்பிட தவறவில்லை.

2. *தமிழ் சமுதாய மையக்குழு*

தொழில்நிலையில் இல்லாத தமிழ் நபர்களைக் கொண்ட (உதாரணமாக குறைகள்/இயலாமைகள் கொண்டவர்கள், குடும்ப உறுப்பினர்கள் மற்றும் தன்னிச்சையான சேவைகளை வழங்கு நிறுவனங்களில் பிரதிநிதிகள்) ஒரு மையக்குழு கூட்டம், மார்ச் 24, 2004-ல், டொராண்டோவில் வாழும் சமுகத்தினருக்கான ஸ்கார்பாரோ அலுவலகங்களில் நடந்தது. ஏறக்குறைய 20 தனிநபர்களும், பல CLT (டொராண்டோவில் வாழும் சமுக) ஊழியர்கள் மற்றும் ரோஹெர் ஸ்தாபனத்தின் நேர்காணல் நடத்துபவர் ஆகியோரும் இதில் பங்கு கொண்டனர்.

CLTபிரதிநிதி அனைவரையும் வரவேற்றபின், கூட்டத்திற்கு பங்கு பெறுவதற்காக வந்த ஒவ்வொருவரையும் தங்களை அறிமுகப்படுத்தி கொள்ளுமாறும், எந்த காரணத்திற்காக வந்துள்ளார்கள் என்பதை கூறுமாறும் கேட்டுக் கொண்டார். இதன்மூலம், அவர்கள் தங்களுடைய குறைகள்/இயலாமைகள் அல்லது தங்களுடைய குழந்தைகளின் குறைகள்/இயலாமைகள் பற்றி கூறுவார்கள் என ஊகிக்கப்பட்டது. எதிர்பார்ப்புகளை எதிர்கொள்ளுவிதமாக, நாங்கள் ஒவ்வொரு மேஜைக்கு அருகில் சென்றபோது, “குறைகள்/இயலாமைகள் கொண்ட நபர்” மிகவும்/முழுவதும் தளர்வாக இருப்பதை உணரப்பட்டது.

எங்களிடம் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட பங்கு பெற்றவர்கள் தங்களின் நீரழிவு நோய் மற்றும் அதிக இரத்த அழுத்தம் தொடர்பான பிரச்சனைகள், கண்புரைகள், ஆஸ்துமா (காச நோய்), அழுத்தம், நிணநீர் குறைவினால் ஏற்படும் சோர்வு மற்றும் தளர்ச்சி, உடல்கூறில் ஏற்பட்டுள்ள சிறு பிரச்சனைகள் மற்றும் மன ஆரோக்கியம் தொடர்பான விஷயங்கள் பற்றி கூறினார்கள். அவர்களில் ஒரு பெண்மணி இருதுருவ ஏக்கம்/உளச்சோர்வும் மற்றும் ஒரு மனிதருக்கு இரண்டு வளர்ந்த குழந்தைகளுமே மன ஆரோக்கிய தொடர்பான பிரச்சனைகளையும் கொண்டிருந்தனர். அங்கு பங்கு பெற்ற ஒரு பெண்மணியின் ஒரே மகள் வாய் பேசாத, செவிட்டு தன்மையை குறையாக கொண்டிருந்தார். அந்த பெண்மணியின் மருமகனுக்கும் செவிட்டு தன்மை குறை இருந்தது. (அந்த தம்பதிக்கு பிறந்த இரு குழந்தைகளுமே நன்கு கேட்கும் திறனை பெற்றிருந்தனர்). அங்கு வந்த இரு மனிதர்கள் முழுமையான குருடாகவோ அல்லது குறைந்த பார்வை திறனை கொண்டவர்களாகவோ இருந்தனர். மேலும் ஒரு பெண்மணி தனது 5 வயது மகனுடன் வந்திருந்தார். அந்த குழந்தைக்கு இதயம் தொடர்பான பிரச்சனை (பிறவியிலிருந்தே) மருத்துவ ரீதியான பிரச்சனைகளும் இருந்தது. அந்த குழந்தைக்கு மன ரீதியான குறைகள் இருந்ததா என்று தெரியவில்லை. ஆனால், அந்த பையன் சிறப்பு மொழி திட்டம் கொண்ட பள்ளியில் சேர்க்கப்பட்டிருந்தான். இதனுடன்கூட எந்தவித குறைகள்/இயலாமைகள் இல்லாத மூன்று குழந்தைகளை கொண்ட தந்தை ஒருவரும் வந்திருந்தார். ஆனால் அவருடைய மனைவிக்கு மன ஆரோக்கிய பிரச்சனைகள் இருந்தது. மேலும் ஒரு குறைபாடு/இயலாமை கொண்ட குழந்தையுடன் (அந்த மகனுக்கு தற்பெருமை செய்கை/தன்னையம் இருந்தது) ஒரு தாய் வந்திருந்தார். கண்பார்வை அற்ற ஒரு தம்பதிகளுடன் (இருவருக்குமே முழு பார்வை இல்லை) இந்த குழு 10 நிமிடங்கள் செலவழித்து ஒரு கலந்துரையாடலை மேற்கொண்டது.

a. *சேவை காரியாலயங்கள் மற்றும் நிறுவனங்களுடன் சமூக ஈடுபாடு*

சமூக சேவைகளுடனான பிரச்சனைகள் குறித்து கேட்கப்பட்ட வினாவிற்கு விடையளித்த ஒரு பங்கேற்பாளர் கூறியதாவது: கிடைக்கக்கூடிய சேவைகள் மற்றும் ஆதரவுகள் குறித்து போதிய தகவல்கள் இல்லை என்றார். அவருடைய குழந்தைகளை பொறுத்த விஷயத்தில்கூட, அவர்களின் பிரச்சனைகளை மருத்துவ ரீதியாக ஆய்ந்தறிவதில் அதிக கால தாமதம் ஏற்பட்டது. தகவல்கள் மற்றும் சேவைகளை பெற இயலுகிற இடத்தில், அவர்கள் திருப்பி அனுப்பப் படுகின்றனர் என்றும் அவர் மேலும் கூறினார். இது ஸ்கார்பாரோவில் உள்ள ஒரு குறிப்பிட்ட மருத்துவமனையில் அவருக்கு ஏற்பட்ட அனுபவமாகும். மறுதலையாக, போதுமான தகவல்கள் மற்றும் ஆதாரங்கள் அந்த மக்களிடம் இல்லை என்றாலும், அது குறித்து சேவை வழங்குபவர்களின் எதிர்பார்ப்பு அதிகமாக உள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

உதவி செய்யும் செயல்திட்டம் கொண்ட ஸ்கார்பாரோவில் உள்ள ஒரே ஒரு மருத்துவமனையில், அந்த திட்டமும் மூடப்பட்டுவிட்டதால், உதவி

செய்யும் திட்டத்தின்மூலம் பெறும் உதவிகளும் ஓர் முடிவுக்கு வந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

டொராண்டோவின் பிரயாணத்திற்கான அதிகார குழுவுடன், அதிலும் குறிப்பாக 'வீல்ட்ரான்ஸுடன்' ஒரு பங்கேற்பாளருக்கு ஏற்பட்ட பிரச்சனைகள் குறித்து ஒரு நீண்ட கலந்துரையாடலை இந்த குழு மேற்கொண்டது. அந்த கலந்துரையாடலின் போது அவர் தெரிவித்ததாவது, முதலில் அந்த அதிகார குழுவினர் சேவைக்காக தகுதியில்லை என்று தீர்மானித்தனர் பின்னர் மேல்முறையீடு செய்யப்பட்டது. ஒரு தன்னிச்சை உதவி நிறுவனத்தை சேர்ந்த ஒரு பிரதிநிதி குறிப்பிட்டதாவது, 'வீல்ட்ரான்ஸில்' நுழைய அனுமதி பெறுவதற்கு - "சரியான வார்த்தைகளை பிரயோகிக்க/சொல்ல வேண்டும்" என்பதை அவர்கள் தெரிந்திருக்க வேண்டியது முக்கியம் என்றார்.

இது இன பாகுபாடு தொடர்புடைய விஷயமாக எந்தவிதத்திலும் இல்லை என்றாலும், வெள்ளை இனத்தவர்கள் மற்றும் கனடாவை தாயகமாக கொண்டவர்கள், தங்களுக்கு அந்த சேவை தேவையாக இருக்கிறது அல்லது இல்லை என்றாலும், எப்படி பேச/உரையாட வேண்டும் என்பதை நன்கு அறிந்திருக்கிறார்கள் என்று உணரும் தன்மை நிலவுகிறது. ஒரு தம்பதிக்கான சுய-தீர்மானம் மற்றும் சுதந்திரம் குறித்த தகவல்கள் ஒரு தேவையாக இருக்கிறது என்று தெளிவுபடுத்தப் பட்டது. தன்னுடைய சந்ததியினர், தங்களை தாங்களே காப்பாற்றி கொள்ள இயலும் என்ற விருப்பத்தையே இழந்துவிட்ட மற்றும் தன் மகள் மற்றும் மருமகனுக்கு வேண்டிய பாதுகாப்பை வழங்கிவரும் ஓர் பெண்மணியின் நிலையின்படி, வெளிப்புற ஆதாரங்களை குறித்து அதிக அளவிலான பாதுகாப்பு மற்றும் நம்பிக்கை தேவை என்ற எண்ணம் வெளிப்படையாக தெரிகிறது. கனடாவைச் சேர்ந்த தனிநபர் வாழ்வின் இயக்கம் குறித்த தொலைநோக்கிலிருந்து, உணர்வு தொடர்பான குறைகள்/இயலாமைகள் கொண்ட இந்த முதியவர்கள், அதிக அளவில் தனிநபராக வாழுதல் குறித்த திறமைகளை கற்றிருக்கக் கூடும் எனத் தெரிகிறது.

சேவைகளுக்கு பரிந்துரை செய்வதற்கு, தமிழ் சமுதாயத்தினரிடமிருந்து பெறப்படும் தகவல்கள் மிக முக்கியமானவை ஆனால் இந்த சமுதாயம் தானே, பரவலாக உபயோகிக்கப்பட்டு வரும் தொழில் முறையான முக்கிய போக்கு சேவைகளுக்கு தொடர்பினை வழங்குவதில்லை (உதாரணமாக சர்ரே ப்ளேஸ் சென்டர், ப்ளோர்வியூ மேக்மிலன் குழந்தைகளுக்கான மையம்) என்று சுட்டிக் காட்டப்பட்டது.

தன் மகனுக்கு தற்பெருமை செய்கை/தன்னையம் நோயால் (ஆட்ஸம்) துன்பப்படும் தாய் எங்களிடம் கூறியதாவது, அவருக்கு இடை ஓய்வு பாதுகாப்பு மற்றும்/அல்லது ஓய்வு நேரம் தேவைப்பட்டபோதிலும், தன் மகனுக்காக இறுதியில் ஒரு பொது மருத்துவர் கண்டுபிடித்து விட்டதாகவும், அதனால் அவர் மகிழ்ச்சியுடம் இருப்பதாகவும் கூறினார். டொராண்டோ பகுதியில் இருக்கும் பல மருத்துவ/புனர் நிர்மான நிறுவனங்களுடன் அவர் தொடர்பு கொண்டிருந்தபோதிலும், நண்பர்கள் அல்லது உறவினர் குடும்பத்திலிருந்து அவருக்கு எந்த உதவியும் கிடைக்கவில்லை என்று கூறினார். முறையான இடைவெளியில் அவருடைய கணவரும், குழந்தைகளுக்கு உதவி செய்வதாக கூறினார்.

## 3. *தமிழ் சேவை வழங்குபவருக்கான மையக் குழு*

தமிழ் சமுதாயத்தினுள் ஆராய்ச்சி மேற்கொண்டிருப்பவர்கள் அல்லது சேவைகளை வழங்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர்கள் அடங்கிய மையக்குழு கூட்டம், டொராண்டோவில் வாழும் சமூகத்தினருக்கான ஸ்கார்பாரோ அலுவலகங்களில், மார்ச் 23, 2004-ல் நடைபெற்றது. ஏறக்குறைய 15 தனிநபர்கள் பங்கு கொண்டனர்.

அறிமுக நிகழ்வில், இத்தகைய மையக்குழுவின் நோக்கங்கள் குறித்து குழுவிற்கு சொல்லப்பட்டது. குறைகள்/இயலாமைகள் கொண்ட தமிழர்கள் டொராண்டோவில் வாழும் சமூகத்தினர்களுடன் எப்படி இணைந்து வாழ்கிறார்கள் என்பதை தெரிந்து கொள்ள ஆராய்ச்சியாளர்கள் விரும்கிறார்கள் என்பது குறித்துக் கொள்ளப்பட்டது.

### *அ சேவை காரியாலயங்கள் மற்றும் நிறுவனங்களுடன் சமூக ஈடுபாடு*

குறைகள்/இயலாமைகள் உடைய குழந்தைகளை கொண்ட குடும்பத்தினர்களின் நண்பர்கள், மருத்துவர்கள், பள்ளிகள் மற்றும் பகல்நேர பாதுகாப்பு மையங்கள் ஆகியவற்றினால், அவருடைய நிறுவனம் உதவி வேண்டுகிற குறிப்புகளை பெற்றது என்று முதலில் பேசிய நபர் குறிப்பிட்டார். அவரிடம் தெரிவிக்கப்பட்டதாவது/ கண்டறிந்ததாவது, இத்தகைய சூழ்நிலையில் தமிழ் குடும்பங்கள் அவர்களுடைய சொந்த சமூகத்தினருடன் ஒன்று சேர்ந்து வாழ தயாராக இல்லை, மேலும் ஆகையால், தங்கள் சமூகத்தை விட்டு வெளியேறி, தமிழரல்லாத/முக்கிய போக்கு சேவை வழங்குபவர்கள் ஆகியோர்களுடன் ஒத்து போவதில் ஆறுதல் அடைகிறார்கள். மனம் தொடர்பான குறைகள்/இயலாமைகளை குறித்து தமிழர்கள் உணர்ந்து கொண்டதை உள்ளார்ந்த விதமாக இருப்பதை காண்பதைக் காட்டிலும், செயல் தொடர்பு வரையறைகளை மேற்கொள்ள வேண்டும். இனத் தொடர்பான விஷயங்களை பரிமாறி கொண்டவரைவிட, மனம் தொடர்பான குறைகள்/இயலாமைகளை பற்றி அறிந்த செய்திகளை பரிமாறி கொண்டவர்களிடம் உதவியையும், ஏற்றுக் கொள்ளுதலையும் சில தமிழர்கள் பெறுவதை காணமுடிகிறது.

மையக்குழு பங்கேற்பாளர்களில் இரண்டு பேர்கள் தெரிவித்ததாவது, தற்பொழுது தமிழர் சமூகத்தினுள்ளேயே தொடர்புகள் ஏற்படுவதை காணமுடிகிறது என்றார்கள். குறைகள்/இயலாமைகள் கொண்ட 150 மனிதர்கள், அவர்களில்10 பேருக்கும் மேலானவர்கள் மனம் தொடர்பான குறைகள்/இயலாமைகள் கொண்டவர்கள் பற்றிய ஒரு தரவு தொகுப்பை, அவர்களுடைய நிறுவனம் தொகுத்தது. அரசாங்கத்திலிருந்து உதவி பெறுவதில் அவர்களுக்கு பிரச்சனைகள் இருந்தபோதிலும், மற்றும் சேவைகள் குறித்த அவர்களுடைய நோக்கமும், வரைவும் சிறிது என்றாலும் - இணையதளம் மற்றும் வாக்குறுதிகள்/வாய் வழி பிரச்சாரத்தின் மூலமாக தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதில் வெற்றியடைந்துள்ளனர். நிதி பற்றாக்குறையின் காரணமாக, அவர்களால்

வாரத்திற்கு 10-15 மணி நேரங்கள் மட்டுமே செலவிட முடிவதாகதாகவும், அவர்களின் அடிப்படை நோக்கத்தை பூர்த்தி செய்ய இயலாமல் இருப்பதாகவும் தெரிவித்தனர். முக்கிய போக்கு சேவை வழங்குபவர்களால் வழங்கப்படும் சேவை குறித்த விஷயங்களை பற்றி பேசும்போது, மொழி தடைகள், சமூகத்தில் சேவைகளை குறித்து போதிய அறிவுடைமை இல்லாமை மற்றும் போதிய போக்குவரத்து வசதி இன்மை ஆகிய பிரச்சனைகளையும் குறிப்பிட்டனர். குறைகள்/ இயலாமைகள் உடைய தமிழ் மக்களுக்கான முக்கிய ஆதரவு ஆதாரமாக அவர்கள் குடும்பங்களே இருக்கின்றன என்றும், வேறுவிதமான பாதுகாப்புகளை குறித்து அறிந்து கொள்ளும் புலமை ஓர் வரையறைக்குட்பட்டது என்று அவர்கள் தெரிவித்தனர்.

உதவி தேவைப்படுகிற அனைத்து தனிநபர்கள் மற்றும் குடும்பங்களை அணுகுவதற்கு, தமிழ் சேவை நிறுவனங்களுக்கு ஓர் திறமை/தகுதி தேவையில்லை என்ற கருத்தும் சுட்டிக் காட்டப்பட்டது.

இனப்பற்று வாய்ந்த குடும்பங்கள் அவர்களுடைய கொள்கையில் நிலையாக இருக்கின்றனர். ESL நெறிமுறைக்கான தேவை, சேவைகளை குறித்து தெளிவான புலமை இல்லாமை, பெரும்பாலும் இத்தகைய குடும்பங்களுக்கு முக்கிய போக்கு சேவைகள் தேவைப்படுதல் ஆகியவற்றை பண்புநலன்களாக அவர் (அவள்) குறிப்பிடுகிறார். வெள்ளை இனத்தவர்கள் எளிதில் சமூக ஆதரவை பெறும் நிலையில், சமூக இன குடும்பங்கள் பெரிதும் அதிகாரபூர்வ சேவைகளையே சார்ந்திருக்கிறார்கள்.

தொலைதூர அணுகுமுறை, உணர்வுநிலை மற்றும் திறமை உருவாக்கம் ஆகியவற்றின் வழியாக மனம் தொடர்பான குறைகள்/ இயலாமைகள் கொண்ட தமிழ் சமுதாயத்தினரை குடும்ப சேவைகள் சங்கம் [Family Services Association (FSA)] இலக்காக கொண்டுள்ளன. சோமாலி ஜனத்தொகை பெரும்பான்மையாக அமைந்த ஒரு பகுதியில், ரெக்டேல் சமூக ஆரோக்கிய மையத்தில் FSA கூட ஓர் அலுவலகத்தை கொண்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடதக்கது.

சமீபத்தில் குடியேறிய நிலையில், ஏதேனும் ஒரு தேவை இருந்தால், பெற்றோர்கள் இருவருமே வேலைக்குச் செல்ல வேண்டிய நிர்பந்தம் ஏற்படுகிறது. கிடைக்கக்கூடிய சமூக ஆதாரங்கள் குறித்து குழுத் தலைவர் கேட்டார் அதாவது பெற்றோர்கள் வேலையாற்றும்போது, அவர்களின் குழந்தைகளை பாதுகாப்பவர்கள் யார்? குழு அளித்த பதிலாவது அவர்களின் தாத்தா-பாட்டிகள் மற்றும் அடுத்த வீட்டுக்காரர்கள் குழந்தைகளுக்கான உடனடி தேவையை பார்த்து கொள்வார்கள்.

இந்த விடையானது முழுமையான ஒரு சிறிய கலந்துரையாடலை குழுக்களிடையே உண்டுபண்ணியது. மேலும் அதிக அளவில் செய்யக் கூடிய சேவைகள் இருக்கின்றன. ஆனால் மறுபடியும் கூறப்பட்டதாவது, மக்கள் தேவையில்லாமல் வெளியே வந்து அவற்றை அணுக மாட்டார்கள். "பாதுகாப்பு வழங்குபவருக்கான பாதுகாப்பு" என்பதை குறித்து சிறிதளவு முக்கியத்துவமே இருப்பதாக மேலும் கூறப்பட்டது.

சமூகத்தின் உள்ளேயே ஆதரவிற்கான வசதிகள் இருக்கின்றன. ஆனால் இது தேவையான அளவில் பரப்பப் படவில்லை - இது இன்னமும் வெட்கக் கேடாக உள்ளது. உதாரணமாக, குறைகள்/இயலாமையுடன் பிறந்த ஒரு குழந்தையைப் பற்றி பேசப்படுவதில்லை அல்லது அந்த பிறப்பு கொண்டாடப் படுவதில்லை.

### *ஆ மனத்தொடர்பான குறைகள்/இயலாமைகள் குறித்து அறியும் சக்தி*

தமிழ் குடும்பங்கள் அதிக பாதுகாப்பு எண்ணம் கொண்டவர்கள் மேலும் அவர்கள் தம் குடும்ப உறுப்பினர்களை சமூகத்திற்குள் தள்ளமாட்டார்கள்- குறைகள்/இயலாமைகள் கொண்ட பல மனிதர்களை சமூக கூட்டத்தில் எப்போதுமே காணமுடியாது என்று ஒரு பங்கேற்பாளர் குறிப்பிட்டார். இருந்தபோதிலும், உதவி தேவைப்படும் குடும்பங்களின் வீட்டுக்குச் சென்று, உதவி வழங்கும் மக்களும் இந்த சமூகத்தினுள் இருக்கின்றனர்.

டொராண்டோவில் வாழும் தமிழர்களை அதிக எண்ணிக்கையில் நேர்காணல் செய்த ஒரு பெரிய அளவீட்டு திட்டத்தில் பங்கேற்ற ஓர் ஆராய்ச்சியாளர் கூறுவதாவது, இன்னமும்கூட மறுத்துக்கூறுதல் மற்றும் பழைய செயலையே பின்பற்றக்கூடியவர்கள் அதிக அளவில் தமிழ் சமுதாயத்தில் இருக்கின்றனர் என்றார். மனத் தொடர்பான குறைகள்/ இயலாமைகள் இருப்பதை குடும்பத்தினர்கள் மறுக்கக்கூடும் அல்லது அவ்வாறு இருந்தால் அதை அங்கீகரிக்ககூட மாட்டார்கள். மனம் தொடர்பான குறைகள்/ இயலாமைகள் கொண்ட மக்களை, குடும்பங்கள் ஆதரவு அல்லது ஊக்கமும் அளிக்கக்கூடும். சமூகத்தினரிடையே சேவைகளை குறித்த அறிவுடைநிலை குறைவாக இருக்கிறது மேலும் அமைப்பை நடத்துபவர்கள் முக்கியமாக ஆங்கிலம் பேசுபவர்களாக இருக்கிறார்கள் என்பது உண்மை என்று கூட அவர் சுட்டி காட்டுகிறார்.

மேல்நிலையிலுள்ள கல்வி திறமைகளை அனைத்து குழந்தைகளும் பெறுவதற்கான விருப்பம் குறித்து, சமூகத்திற்குள்ளேயே சுற்றி, சுற்றி வருகிற முரண்பாடுகள் இருக்கின்றன - மனம் தொடர்பான குறைகள்/ இயலாமைகள் கொண்ட குழந்தைகளுக்காக, இது ஒரு உண்மையான நோக்கமாக இருக்காது என்பதால், குடும்பங்கள் இதை ஏற்று கொள்வது கடினமாக இருக்கக்கூடும். வேறு வார்த்தைகளில், குழந்தையின் வரையறைகளை எப்பொழுதுமே ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

சேவைகளை குறித்த புலமை குறைவாக இருப்பது மட்டுமின்றி, அத்தகைய சேவைகளை ஏற்றுக் கொள்வதிலும், குழந்தையின் வரையறைகளை- ஏனெனில், "இது கடவுளின் விருப்பம்" என்ற எண்ணமிருப்பதால்- அதை ஏற்றுக் கொள்வதிலும் தயக்கம் இருக்கிறது என்று ஒரு பங்கேற்பாளர் தெரிவித்தார். அதிக நிலையிலான தேவைகளுடன் ஒரு குழந்தையை பாதுகாக்க வேண்டியது தங்களின் வாழ்வின் கடமை என்று குடும்பங்கள் எண்ணக்கூடும். குறைகள்/ இயலாமைகள் கொண்ட ஒரு குழந்தை பிறப்பதற்கு காரணம் தாங்கள்தான் என்று ஒரு பெற்றோர்கள் எண்ணுவதால், அந்த

குழந்தையை பேணி காப்பதும் தங்களின் தனிப்பட்ட கடமை என்றே எண்ணுகிறார்கள். பாதுகாக்கும் செயலை சிறிது வரையறுக்கப்பட்ட காலத்திற்குக்கூட மற்றவர்களின் பொறுப்பில் விடும் செயலாவது- வேண்டுமளவில்லாத, குற்ற உணர்வு தருவதாக, மேலும் கடவுளின் தண்டனை கிடைக்கும் என்ற பயம் போன்ற எண்ணங்களுக்கு இட்டுச் செல்லும்.

இந்த கூற்றுக்கு மாறாக, தமிழ் குடும்பங்களுடன் இணைந்து பணியாற்றும், ஒரு தமிழனத்தை சேராத சேவை வழங்குபவர் கூறியதாவது - வீடுகளிலும் சேவைகளை ஏற்றுக் கொள்கிறார்கள் மற்றும் மக்கள் செய்முறை உதவியை விரும்புகிறார்கள் என்றார். உதவிக்காக மருத்துவ சார்பு மற்றும் புனர் நிர்மாண நிறுவனங்களை குடும்பத்தினர்கள் தேடுகிறார்கள் என்பது இந்த உண்மைக்கு ஆதாரமாக காணப்படுகிறது. சமூக கற்பனைகள் மற்றும் தவறான அபிப்பிராயங்களை தவிர்ப்பதற்கு இன சமூகத்தினை விட்டு வெளியே வரக்கூடிய செயல், தமிழ் குடும்பங்களின் அடையாளமாக மறுபடியும் அமைகிறது. பிரத்யேக "சமூகங்கள்" குறைகள்/இயலாமைகளுக்கான ஆதரவு மற்றும் புனர்நிர்மாணம் குறித்த நிபுணத்துவத்தை அளித்து, ஒரு அதிக வரவேற்கக்கூடிய சூழ்நிலையை வழங்கக்கூடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

ஒரு குறை/இயலாமை உடைய ஒரு குழந்தையை கொண்ட குடும்பத்தில், திருமண உறவு ஏற்படுத்திக் கொள்வது புத்திசாலித் தனமல்ல/மோசம் என்று கருதப்படுகிறது மேலும் அந்த பாதிக்கப்பட்ட குழந்தையை மறைத்து வைப்பதால், மகன்கள்/மகள்கள் திருமணத்திற்குரிய தகுதி உடையவர்களாக இருக்கிறார்கள் என்று காட்ட முடியும் என்ற உண்மைகளை மற்றொரு பங்கேற்பாளர் கொண்டு வந்தார். இவ்வாறு குறைகள்/இயலாமைகளை மறைக்கக் காரணம் அது குடும்பத்தின் எதிர்கால சந்ததியினருக்கும் பரவக்கூடும் என்ற பயமாகும்.

சமூகத்தில் அளிக்கப்படும் ஆதரவுகள் மற்றும் சேவைகள் குறித்து மறுபடியும் கலந்துரையாடல் நடந்தது. குடும்பம் மற்றும் நண்பர்களின் ஆதரவு இருக்கிறது என்றபோதிலும் அது ஊக்கமளிக்கும் ஆதரவு வகையாக - இரக்கம் அளிப்பதாக இருக்கும் என்று கூறப்படுகிறது. சில தமிழ் நிறுவனங்கள், அதிக அளவில் நேரிடையான மனோநிலையை நோக்கி, முயற்சி மற்றும் செல்வாக்கு உள்ளதாக மாற்றக்கூடிய செயல்திட்டங்களை தொடங்குவதற்கான முயற்சிகளில் முன்னேற்றம் அடைந்துள்ளது.

வெற்றிப்பெற்ற அனுபவங்களை கூறுமாறு அவர்களை குழு கேட்டப்பொழுது, ஒரு தாமதப்படுத்தப்பட்ட, ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு, நன்மை ஏற்படும் என நம்பிக்கையற்ற சிரிப்பு சிரித்தனர். சிரிப்புகளிடையே, "இவை அனைத்துமே மனசோர்வு அளித்தவை" என்று ஒருவர் கூறினார். சிரிப்புகள் முடிந்தபின், இரண்டு நபர்கள் அவர்களின் வெற்றி பெற்ற அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். அவர்களில் ஒருவர் கூறியதிலிருந்து, சில குடும்பங்கள் தங்களின்

குறைகள்/இயலாமைகள் கொண்ட குழந்தைகளை மறைந்து வைத்திருக்கக்கூடும் என்றார். அதேசமயம் மற்றவர் கூறியதிலிருந்து, தமிழ் குடும்பங்கள் உதவிக்காக தங்கள் சமூகத்தைவிட்டு வெளியே செல்லக்கூடும் என்பதை சூழ்நிலை சுருக்கமாக அறிந்து கொண்டோம்.

இந்த இரண்டு தேர்ந்தெடுத்த பதில்களுமே, தமிழ் சமுதாயத்தினரிடையே நிலவும் ஓர் உண்மையான பிரச்சனையான அறிந்து கொள்ளுதல் மற்றும் ஏற்றுக்கொள்ளுதலை மறக்கச் செய்யக்கூடியது. ஏற்றுக் கொள்ளுதல் மற்றும் சேர்த்துக் கொள்ளுதலுக்கு மிக வலிமையான தடைகள் இருக்கக்கூடும் என்றே தோன்றுகிறது. தமிழ் கலாச்சாரத்தை அடிப்படையாக கொண்ட பல ஆதரவு நிறுவனங்கள் இருந்த போதிலும், குறிப்பிட்ட குறைபாடுகளுக்கு சேவைகளை வழங்குவதில், சமூகத்திற்குள்ளேயே சிறிதளவு செயல்திறன்தான், அதிலும் குறைவாக ஆதரித்து பேசுதல் மற்றும் கருத்து பரிமாற்றத்தை தொடங்கும்நிலை உள்ளது போல் தோன்றுகிறது. ஒரு குறிப்பிட்ட குறை/இயலாமைக்கு பயிற்சி அளிக்கும் தட்டுப்பாடுகளும் தமிழ் சேவை வழங்குபவர்களிடம் உள்ளது. இந்த தட்ட்ப்பாட்டினால், குடும்பங்கள் தங்கள் தேவைகளுக்காக, சமுதாயத்தை விட்டு வெளியேறி, சார்பு நிறுவனங்களை அணுகும் நிலை ஏற்படுகிறது. உதாரணமாக ஒண்டாரியோ வேலைகள், ஒண்டாரியோ குறைகள்/இயலாமைகளுக்கு ஆதரவளிக்கும் செயல்திட்டம், டொராண்டோ பாதுகாப்பு போன்றவை.

4. *சேவை வழங்குபவர்கள், குறிப்பாக, தமிழ் சமுதாயத்தினருடான நேர்காணல்*

தமிழ் சமுதாயத்தை சேர்ந்த உறுப்பினர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துக் கொள்ள மற்றும் அதை நிர்வகிப்பதில் எவ்வாறு வெற்றியடைந்தார்கள் என்பதை அறியும் முயற்சியாக, டொராண்டோவில் உள்ள ஒரு சேவை நிறுவனத்தை சேர்ந்த இரண்டு பிரதிநிதிகள் நேர்காணல் செய்யப்பட்டனர்.

குறைகள்/இயலாமைகள் உடைய மக்களுக்கு, பல அரசாங்க திட்டங்களை கிடைக்கச் செய்ய தேவையான, குறைகள்/இயலாமைகள் குறித்த மருத்துவபூர்வ ஆய்வு மற்றும் மதிப்பீட்டை அவர்களுடைய நிறுவனம் தொடங்கியது என்ற உண்மையை முதல் காரணமாக தெரிவித்தார்கள். இந்த காரணத்திற்காக, அவர்கள் பல மருத்துவ நிபுணர்களிடமிருந்து ஆலோசனைகள் பெற்றனர். ஏனெனில் ஒரு மருத்துவ நிபுணர்தான் ஒரு தனிப்பட்ட நபர் அல்லது குடும்பத்திற்கு எந்தவிதமான ஆதரவுகள் அல்லது சேவைகள் தேவைப்படக்கூடும் என்பதை முடிவு செய்ய முடியும். இந்த சேவைகளின் முதல் நிலை மதிப்பீடு செய்வதாகும்.

டொராண்டோவில் வாழும் சமூகத்தினர், ஆதரவு கட்டுபடுத்தக்கூடிய பல கட்டுப்பாடுகள் மறும் அடிப்படை நோக்கங்களை கொண்டிருந்தாலும், எத்தகைய குறைகள்/இயலாமைகளை எடுத்துக் கொள்ளலாம்/

நிர்வகிக்கலாம் என்பதற்கு, நிறுவனத்திற்கும் சில திட்டமான வரையறைகள் இருக்கின்றன என்று குறிப்பிட்டு காட்டப்பட்டது.

கடந்த பத்தாண்டுகளில், டொராண்டோ பகுதியில், அகதிகளின் வருகை நிகழ்ந்த கால கட்டத்தில், நிறுவன ஊழியர்களுக்கு அந்த நாகரீத்தவர் குறித்த போதிய கல்வியறிவு வழங்கப்பட்டது. சிறுபான்மை இன வாடிக்கையாளர்களுடனான தொடர்புகளை தொடங்குதல் மற்றும் நிர்வகித்தலில் உள்ள நிறுவனத்தின் வெற்றியை எப்படி பாதித்தது என்பது தெளிவாக தெரியவில்லை. சீன சமூகத்தினருடன் (விவரங்கள் கீழே) - டொராண்டோவில் வாழும் சிறுபான்மை இன நாகரீகத்தவர்கள் பற்றிய ஓர் விரிவான புலமையை ஊழியர்களுக்கு விளக்க வேண்டிய நிலை, அவர்களுடைய புனர்நிர்மான மாதிரிக்குள் நாகரீக வேறுபாடுகளை இடம்பெற செய்வதற்கான விருப்ப எதிர்பார்ப்புகள், மற்றும் இத்தகைய பண்புகளுக்கு மேல் நிலை நிர்வாகத்திடமிருந்து ஆதரவை பெறுதல் போன்றவற்றுடன் - ஒப்பிடும்போது இந்த நேர்காணல் மிக நல்ல முறையிலேயே நடத்தப்பட்டது என்றே கூறலாம்.

குறைகள்/இயலாமைகளுக்கு மருத்துவ மாதிரியை அடிப்படையாக கொள்ள வேண்டும் என்று இந்த நிறுவனம் நியாயவாதத்தை கொண்டிருந்தாலும், இது "முழு குடும்பத்தினருடன்" செயல்பட்டு, தற்காலிக சேவைகளுக்கான தேவை, குழந்தை பாதுகாப்பு போன்றவற்றை உள்ளடக்கிய போதிய அளவில் இடமளித்தல்/ பாதுகாப்பு ஆகிய இன்னும் பலவற்றை அறிந்து கொண்டுள்ளது. ஒரு வாடிக்கையாளர்களின் தேவைகள், அவர்களின் குடும்பத்தினரின் தேவைகளோடு சரிசமமாக்கப்பட்டுள்ளதையும், மேலும் நிறுவனம் மற்றும் வாடிக்கையாளர்/குடும்பத்தினர்களுக்கு இடையேயான தொடர்புமுறையை நிர்வகிப்பதற்கு: அதாவது எடுத்துக் கொள்ளப்பட்ட மனிதர்/ஊழியர்கள், வாடிக்கையாளர்களுக்கு தொடர்ச்சியான சேவையை வழங்கக்கூடிய, சேவை தரகர் மற்றும் ஒன்று சேர்பவராக செயல்புரிய வேண்டும் என்பது ஓர் முக்கிய அங்கமாக இருப்பதை நேர்காணல் செய்தவர்கள் கண்டார்கள்.

சீன சமூகத்தினரிடம் மேற்கொள்ளப்பட்ட நேர்காணலுடன் இது மாறுபடுகிறது - இங்கு நேர்காணல் செய்தவர் சீன குடும்பங்களுக்கு தேவையான உதவிகளை மொழிப்பெயர்ச்சியாளர் கொண்டு செய்ய இயலாது - அந்த நாகரீகத்தை சார்ந்தவர்களை/ சீன மொழியை தாய் மொழியாக பெற்றவர்களை கொண்டே செய்யமுடியும் என்பதை வலியுறுத்துகிறார். அவர்களில் பல வாடிக்கையாளர்களுக்கு போதிய ஆங்கில புலமை இல்லாவிட்டாலும், ஆங்கில கலாச்சாரத்தை அடிப்படையாக கொண்ட சேவைகளை பெறுவதில் மகிழ்ச்சியடைகிறார்கள் என்பதை இந்த நேர்காணல் செய்தவர் மேலும் வலியுறுத்துகிறார்.

மொழிமாற்றம் இல்லாமல், கையசைவு போன்ற உடலால் செய்யப்படும் செய்கைகள் மற்றும் சொல்லிய சொற்றொடர்களையே திரும்ப திரும்ப சொல்லுதல் ஆகியவற்றை உள்ளடக்கிய நீண்ட உடன்பாடுகளை/ தயார்

செய்வதற்கான நிலைகளை கொண்டிருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. சில மக்கள் இதை கடினமானதாக மற்றும் தொடர்ச்சியற்றா சேவை என எடுத்துக் கொண்டாலும், இது மாதிரியான செயல்கள் அடிக்கடி நிகழவில்லை. குடும்பத்தில் உள்ள உறுப்பினர்களில் உள்ள ஒருவர் அல்லது அந்த சமூகத்தை சார்ந்த நன்றாக ஆங்கிலம் பேசக்கூடிய மற்றும் மொழிமாற்றம் செய்யக்கூடிய ஒருவரின் தேவை பலமுறை வேண்டியதாக இருந்தது என்று கூறப்படுகிறது.

நிறுவனத்தை பற்றிய சமூக கட்டமைப்பு/எண்ண வெளிப்பாடு குறித்து கேட்டப்பொழுது, குறிப்பிடும் விதத்தில் அந்த நிறுவனம் மாறுபட்டிருந்ததாக நேர்காணல் செய்தவர்கள் காணவில்லை. மேம்படுத்தப்பட்டுள்ள சேவைகள் குறித்த நல்ல கல்வியறிவு பெற்றவர்களை, பெருமளவில் சிறுபான்மை இனம் சார்ந்தவர்களை தேர்ந்தெடுக்கும்போது சேர்க்கவில்லை/அழைக்கப்படவில்லை என்று கூறப்பட்டது.

அ. தமிழ் சமுதாயத்தினர்/சமுதாயம்

- ஆரோக்கியம் மற்றும் மற்ற ஆதரவு சேவைகளை உபயோகிப்பதில் தமிழ் சமுதாயத்தினருக்கு உள்ள இரண்டு பெரிய தடைகளாவன: (1) எத்தகைய சேவைகள் உள்ளன என்பதை பற்றிய போதிய புலமை இல்லாமை, மற்றும் (2) போதிய ஆங்கில புலமை இல்லாமை/தமிழ் மொழியில் உள்ள தகவல் குறைபாடுகள்.

- சேவைகள் குறித்த போதிய புலமை இல்லாமை மற்றும் தமிழ் மொழியில் போதிய அளவு சேவைகள் இல்லாமை போன்ற அணுகுமுறை தடைகள் இருந்தாலும்கூட, உடற்கூறுவியல் தடைகள் (உதாரணமாக: வெட்கம், தயக்கம், படிவங்களை பூர்த்தி செய்தல் மற்றும் சேவை வழங்குபவர்களுடன் செயலாற்றுதல் போன்றவற்றில் காலம் வீணாகக்கூடும் என்ற பயம்) சமூகத்தில் குறைந்த அளவே சேவை உபயோகித்தலுக்கான முக்கிய பங்காக விளங்குகிறது.

- தமிழ் மைய குழுக்களில், குறைகள்/இயலாமைகள் கொண்ட மனிதர்களுக்கான தனிப்பட்ட/சுதந்திர வாழ்க்கை குறித்து போதிய வலியுறுத்தல்கள் இல்லை என்பது போல் காணப்படுகிறது. குறைகள்/இயலாமைகள் கொண்ட மனிதர்களை இரக்க மனப்பான்மையுடன் காணும் கண்ணோட்டம் இருப்பதால், வெற்றியடைவதற்கான வாய்ப்புகள் இல்லை என்ற விதத்தில், எந்தவித குறைபாடுகளும் இல்லாதவர்களுக்கு அளிக்கப்படக்கூடியவை இங்கு பின்பற்றபடுவதில்லை.

- "பாதுகாவலை வழங்குபவருக்கான பாதுகாப்பு" என்பது குறித்து தமிழ் சமுதாயத்தினரிடையே போதிய வலியுறுத்தல்கள் இல்லை.

- உதவி மற்றும் ஆதரவிற்காக, தங்களுடைய இன சமுதாயத்தைவிட வெளியிடத்தினை தேடுவது தமிழின தனி நபர்கள் மற்றும் குடும்பங்களுக்கு மிக வசதியாக இருக்கிறது. சில மனிதர்களை

அவர்கள் தமிழ் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்ற நோக்கில் காண்பதைவிட, குறைகள்/இயலாமைகள் கொண்ட தனி நபர்கள் அல்லது குறைகள்/இயலாமைகள் உடைய உறுப்பினரை கொண்ட குடும்பம் என்ற நோக்கில் அடையாளமிட்டு காட்டுகின்றனர்.

- குறைகள்/இயலாமைகள் உடைய கனடிய தமிழர்களை கொண்ட நிறுவனம், இந்த சமூகத்தை இணைக்கக்கூடிய ஒரு மதிப்பு வாய்ந்ததாக இருக்கும். குறைகள்/இயலாமைகள் கொண்ட தனிநபர்களை உள்ளடக்கிய ஒரு தரவு கோவையை (டேட்டபேஸ்) இந்த குழு தயாரிக்க தொடங்கியுள்ளது. மேலும் சமீப காலத்தில், டொராண்டோவில் நிலவும் குறைகள்/ இயலாமைகள் குறித்த மாநாட்டையும் நடத்தியுள்ளது.

- தமிழர்கள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்களாகவும், தங்கள் குழந்தைகளை மருத்துவர்கள், வக்கீல்கள் மற்றும் மற்றைய தொழில் நிபுணத்துவம் உடையவர்களாக செய்ய வேண்டும் என்ற அதிக எதிர்பார்ப்புகளை கொண்டிருக்கின்றனர். ஆகையால், குழந்தைக்கான வரையறைகளை ஏற்றுகொள்ளுதல் என்பது அவர்களுக்கு கடினமான செயலாக இருக்கிறது.

## 8. பரிந்துரைகள்

முக்கிய சார்பு கனடிய சேவை நிறுவனங்கள் அவர்களின் சமூகத்தினுள் ஒரு வழிக்காட்டலை அமைக்க பல வழிகளில் செயல்படமுடியும் என்று ஆராய்ச்சியில் பங்கு கொண்டவர்கள் கருத்து தெரிவித்தனர். இத்தகைய கருத்துகளில், தகவல்கள் வழங்குதல், கல்வி மற்றும் நம்பிக்கை மற்றும் கீழ்கண்டவைகள் முக்கியமாக அடங்கியுள்ளன:

1. நிறுவனம் குறித்த விளக்கம், மற்றும் அது வழங்கக்கூடிய சேவைகள் குறித்த சுருக்கமாக தகவல் அளிக்ககூடிய பிரசுரங்கள் (மாண்ட்ரியன் மற்றும்/அல்லது கான்ட்டோனீஸ், தமிழ் மற்றும் சோமாலி மொழிகளில்) தொடர்ச்சியாக/வரிசைகிரமமாக தயாரிக்க வேண்டும். இன-நாகரீக நிறுவனங்களோடு ஆலோசனை செய்து, நிபந்தனைகளுக்கு உட்பட்ட சாதகமான முறையில் இந்த பிரசுரங்கள் இருக்க வேண்டும். ஆரம்ப பதிப்புகள் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தை சார்ந்த வரையறைக்குட்பட்ட பிரிவுகளுக்கு, ஒரு முன்மாதிரியாக/வெள்ளோட்டமாக அளிக்கப்பட வேண்டும்.

2. இந்த அறிக்கையில் கண்டறியப்பட்ட சில குறிப்பிட்ட விஷயங்களை எடுத்துக் காட்டியவை - அதாவது மனம் தொடர்பான குறைகள்/இயலாமைகள், குறிப்பிட்ட குழுக்களுக்கு ஏற்பாடு செய்பவர்கள் பற்றிய விவரங்களை உள்ளடக்கியதாக சுருக்கமாக தகவல் அளிக்ககூடிய பிரசுரங்களை தொடர்ச்சியான முறையில் தயாரிக்க வேண்டும். உதாரணமாக, சோமாலி மொழியில் தயாரிக்கப்படும் பிரசுரங்கள் - மன ஆரோக்கியம் மற்றும் மனம் தொடர்பான குறைகள்/இயலாமைகள் ஆகியவற்றிற்கு

இடையேயுள்ள வேறுபாட்டை மையப்படுத்தி காட்ட வேண்டும். அதோடு அதில் மருத்துவ ரீதியான உயிரியல் இயல்பு காரணங்களும் குறிப்பிட பட்டிருக்க வேண்டும். இத்தகைய பிரசுரங்கள் காரணத்தை குறிப்பிடும் கட்டுக்கதைகளை (உதாரணமாக - கடவுளின் தண்டனை, ஆவி/பேய் பிடித்திருத்தல், கர்ப்ப நிலையில் இருக்கும்போது குறையுடைய மனிதரை பார்த்தல் மற்றும் பல) எடுத்துக் காட்டுவதாக இருக்க வேண்டும். கனடியன் மன நல சங்கம் தயாரித்துள்ள தொடர்ச்சியான விளக்க மூலப் பொருள்கள் இத்தகைய பலப்படுத்தும் எண்ணத்தை எடுத்து காட்டுவதில் பயனளிக்கும் உதாரணமாக இருக்கிறது.[4]

3. மனம் தொடர்பான குறைகள்/இயலாமைகள் குறித்து கற்றுக் கொள்ளுதல், தனிநபர்கள் மற்றும் குடும்பங்களுடன் ஒரு வலைபின்னலை உருவாக்கி கொள்ளுதல், ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் பிரசுரங்கள் பிரதி எடுத்துக் கொள்ளுதல் இன்னும் பல ஆதாரங்களை சமர்ப்பிபதற்கு விருப்பம் உடைய, இன-நாகரீக நிறுவனங்கள் மற்றும் குடியேறி வாழும் பணியாளர்கள் ஆகியோர்களுடன் எப்போது செயல்நிலையில் இருக்கக்கூடிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.[4]

4. முடிந்தவரை, சேவை ஒத்துழைப்புகளை அந்த வாடிக்கையாளரின் தாய்மொழியிலேயே வழங்க வேண்டும். இது மொழிமாற்றம் செய்யப்பட்டதாகவோ அல்லது ஆங்கிலத்தை தவிர அந்த, அந்த மொழிகளில் சரளமாக பேசக்கூடிய ஊழியர்களை பணியில் ஈடுபடுத்த வேண்டும்.

5. ப்ளோர்வியூ மேக்மில்லன் குழந்தைகளுக்கான மையம், சர்ரே ப்ளேஸ் மையம், மற்றும் நோயுற்றா குழந்தைகளுக்கான மருத்துவமனை போன்ற மருத்துவ மற்றும் புனர் நிர்மாண நிறுவனங்களுடன் தொடர்பை வலுபடுத்திக் கொள்ள வேண்டும். டொராண்டோவில் வாழும் சமூகத்தினர்கள் பற்றி இந்த நிறுவனங்கள் அறிந்திருந்தாலும், இந்த புலமைகள் அதன் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படவில்லை என்பதற்கான ஆதாரம் உள்ளது. CLTயின் காத்திருப்போர்களுக்கான பட்டியல் மற்றும்/அல்லது வகைப்படுத்தலை குறித்த போதிய செயலாக்கம் இல்லாமை ஆகியவை ஆலோசனைக்கு அனுப்புவதை/பெறுவதை பாதிக்கக்கூடியதாக அமையும்.

6. டொராண்டோ பகுதியில் உள்ள பள்ளிகளுடன் தொடர்பினை வலுபடுத்தி கொள்ள வேண்டும். டொராண்டோவில் வாழும் சமூகத்தினர்கள் பெரும் எண்ணிக்கையில் ஆலோசனை கேட்பதற்கான விருப்பம் தெரிவித்தல்களை பள்ளி அமைப்புகளிலிருந்து பெறுகின்றனர். இருந்தபோதிலும், மனம் தொடர்புடைய குறைகள்/இயலாமைகள் கொண்ட குடியேறியவர்களின் குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் தேவைகளை

---

[4] தகவல்களுக்காக, http://www.providence.on.ca/programs_ccentre_tamil.asp என்ற வலைதளத்தை பார்க்கவும்

ஓரளவிற்கு மையப்படுத்தப்பட்ட CLT விருப்பத்தினை முக்கியத்துவப்படுத்தி, தொடர்புகளை புதுப்பிக்க வேண்டிய நிலையில் இருப்பதை சிறுபான்மை இன குடும்பங்களுக்கு சேவை செய்யும் நிறுவனங்களின் பிரச்சனைகளாக கருத்து தெரிவிக்கின்றன.

7. சிறுபான்மை இன சமூகங்களில் உள்ள இரட்டை தகவல்கள் ஆட்சேபனையாவது: (1) இன-நாகரீக அடிப்படையில் குடியேறியவர்கள், பொழுதுபோக்கு மற்றும் நாகரீகத்தை அடிப்படையாக கொண்ட நிறுவனங்கள் ஆகியவற்றை அணுகுவதை குறித்த ஆட்சேபம் மற்றும் (2) நாகரீகத்தால் குறிப்பிட்டு/வலியுறுத்தி காட்டப்படும் களங்கத்தின் காரணமாக, இத்தகைய நிறுவனங்களை தவிர்க்கும் குறைகள்/இயலாமைகள் கொண்ட தனிநபர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களை அணுகுதல் குறித்த ஆட்சேபம் போன்றவை. ஆகையால், முடிந்தவரை பெருமளவில் மக்களை அணுகுவதற்கு, குறிக்கோளாக (1) மற்றும் பரவலாக (2) தகவல்களை பரப்பும் கொள்கை தேவைப்படுகிறது.

8. பல நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளை நேர்காணல் செய்தபோது, மற்றும் இந்த மையகுழுவில் பங்கேற்றவர்கள், CLT கல்வி மற்றும் தகவல்கள் தொடர்பான மற்றும் கருத்தரங்குகள் நடத்துவதற்கு போதிய உதவியும், இடமும் அளித்தனர். சோமாலி சமூகத்திற்காக, சோமாலி மக்கள் தொகை அடர்த்தியாக உள்ள இடத்திற்கு அருகாமையில் டிக்ஸன் சமூக சேவைகள் அமைந்திருக்கிறது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் 'சமூக பெரியவர்கள்' ஒரு குழுவாக டேஜிந்தா பீஷாவில் சந்திக்கின்றனர். அங்கே குறைந்த கால அளவிலான ஆனால் வெற்றிகரமான தகவல் கூட்டத்தொடர் முன்பே நடைபெற்றுள்ளது. குறைகள்/ இயலாமைகள் கொண்ட கனடியன் தமிழ் நிறுவனம், தமிழ் சமூகத்தின் தெளிவான தேர்ந்தெடுத்தலாக இருக்கிறது. இத்தகைய வாய்ப்புகளை அணுகுவதற்கு தேவையானவற்றை வழங்கக்கூடிய சீன தொழில் நிபுணர்களுடன் CLT முன்பே ஒரு நல்ல தொடர்பை கொண்டுள்ளது.

9. உண்மையான சோமாலிகள், தமிழர்கள் மற்றும் சீன தனிநபர்கள் தங்களுடைய அனுபவங்களை தெரிவிக்கும் விதமாக ஒரு வீடியோ தயாரிக்கப்பட வேண்டும் என்ற ஆர்வம் வெளிப்படுத்தப் பட்டுள்ளது. இதன்மூலம், அந்த இன-நாகரீக சமூகங்களுக்குள் உள்ள பல அணுகுமுறை தடைகளை அவர்களே அளிக்க முடியும் என்பதால் இதனை காணும் வாய்ப்பு பெறும், இவர்களை போன்ற விஷயங்களை எதிர்நோக்கும் சமூக உறுப்பினர்கள் தங்கள் நம்பிக்கைகள் மற்றும் மனம் தொடர்பான தடைகளை தாண்டி வரமுடியும்.

10. இந்த மூன்று சமூகத்தை சேர்ந்தவர்களுமே, செய்திதாள், இணைய தள தொடர்பு மற்றும் வானொலி நிகழ்ச்சிகளை கேட்டல் போன்ற ஒரு வளமான வலைதொடர்பை கொண்டுள்ளனர். குறிப்பாக சோமாலிகள், ஞாயிறு கிழமை இரவுகளில் 'சின்' CHIN (AM 1540) தலைமையேற்று நடத்தப்படும் வாராந்திர வானொலி நிகழ்வுகளின் மூலம் வழங்கப்படும் தகவல்களை உபயோகப்படுத்திக் கொள்ள

வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றனர். அந்த சமூகத்தை சேர்ந்த பெரும்பான்மையான மக்கள் இந்நிகழ்ச்சிகளை கேட்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வாராந்திர நாட்களில் மதியம் 1.00 மணி முதல் மாலை 6.00 வரை நிகழ்ச்சிகளை கேண்டோனீஸ் மொழியிலும்கூட CHIN வழங்கி வருகிறது. தமிழ் நிகழ்ச்சிகளை கேட்பதற்கு, அதற்கென விற்கப்படும் சிறப்பு வானொலிகளை, டொராண்டோவில் தமிழர்களால் நடத்தப்படும் கடைகளிலிருந்து பெற்று கேட்கலாம். குறிப்பிட்ட இன தொடர்பான நிறுவனங்களிலிருந்து உதவிகளை கேட்க பயப்படும் அத்தகைய மக்களை அணுகுவதற்கு, இந்த முறையானது மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

11. குறைகள்/இயலாமைகள் கொண்ட தனிநபர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பங்களுக்காக, சமூக நாகரீக நிறுவனங்களுடன் பணியாற்றி, ஆதரவு குழுக்களை நிறுவ வேண்டும். இதனால், குறைகள்/இயலாமைகள் காரணமாக, "மறைந்து வாழ்பவர்கள் வெளியே வந்து" தங்களை போலவே பிரச்சனைகளை எதிர்கொள்பவர்களை ஒரு நல்ல பாதுகாப்பான சூழ்நிலையில் சந்தித்து தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ள வழிவகுக்கும்.

12. டொராண்டோவில் வாழும் சமுகத்திலிருந்து ஆலோசனைகளை எடுத்துக் கொள்ளக்கூடிய மனப்பான்மை கொண்ட குறிப்பிட்ட இனத்திற்கான நிறுவனங்கள் குறித்த ஒரு தரவுகோவையை நிறுவ வேண்டும்.

13. டொராண்டோவில் வாழும் சமுகம் ஒரு கற்றுகொள்ளும் நிறுவனம் என்பதை நினைவில் கொள்ளவும். மனித சேவைகள் குறித்த ஆராய்ச்சியினால் எழுந்த நிகழ்நிலைபடுத்தப்பட்ட புலமைகளை நிர்வகிக்க ஊழியர்கள் தேவைபடுகிறது. மற்றும் ஊழியர்களுக்கு நிகழ்நிலைபடுத்தப்பட்ட புலமைகளை சேகரித்து வைக்கவும், நிர்வகிப்பதற்குமான வாய்ப்புகளை வழங்க வேண்டும். இந்த நிறுவனத்திற்குள்ளாக மிக எளிதாக ஊழியர்கள் இயங்கி, வளர்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டும். தங்களின் புலமை மற்றும் அனுபவத்தை நிர்வாக்த்திற்கு தெரிவிப்பதற்கான உண்மையான வாய்ப்புகளை ஊழியர்களுக்கு வழங்க வேண்டும்.

## 9. முடிவுரை

இந்த அறிக்கையும், அதனால் விளைந்த ஆராய்ச்சியின் முடிவும், டொராண்டோவில் வாழும் சீன, சோமாலி மற்றும் தமிழ் சமூகத்தினர்களின் மனம் தொடர்பான குறைகள்/இயலாமைகளை அனுபவபூர்வமாக உணர்ந்து கொள்வதை மையப்படுத்துகிறது. இது கண்டறிந்ததாவது, எந்த இனத்தை சார்ந்தவர்கள் என்பதை பற்றி கருத்தில் கொள்ளாமல் குறைகள்/ இயலாமைகள் உடைய தனி நபர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர்கள் தங்களுடைய அனுபவங்களை தனிப்பட்ட முறையில் பகிர்ந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மதம், தத்துவம், அரசாங்கம், நாடோடி/பாரம்பரிய கதைகள் மற்றும் அனுபவங்களிலிருந்து உருவான தாக்கத்தின்/ஆதிக்கத்தின் காரணமாக குறைகள்/இயலாமைகள் உடைய மக்கள் மற்றும் அவர்களுடைய குடும்பங்கள் குறிப்பிட்ட நாகரீகத்தால் வலியுறுத்தப்படும் மனோபாவங்களை வரவேற்பதோ மற்றும் ஆதரவு அளிப்பதோ இல்லை என்று தெரிகிறது. சிறுபான்மை இன நாகரீக சமூகங்களைவிட, கனடாவில் உள்ள "வெள்ளை" கலாச்சாரம் சார்பு போக்கினை கொண்டுள்ளது என்பது உண்மைக்கு புறம்பாகமல் பொருந்தும்.

இத்தகைய சமூகங்களுக்கு தேவை என்று ஆராய்ச்சி சுட்டி காட்டுவதாவது - அளவிடமுடியாத வலிமைகள் மற்றும் சேர்த்து கொள்ளும் தகுதி மற்றும் பரஸ்பர ஆதரவு கொண்டிருத்தல் -மனம் தொடர்பான குறைகள்/இயலாமைகள் கொண்ட தனிநபர்கள் மற்றும் அவர்கள் குடும்பங்களுக்கான அதிக அளவில் ஆதரவு அணுகு முறைகளை மேம்படுத்தல் - ஆகியவையாகும். சில பகுதிகளில், குறிப்பாக மனம் தொடர்பான ஆரோக்கிய விஷயங்களில், முன்னேற்றம் முன்பே இருக்கிற போதிலும், டொராண்டோவில் வாழும் சமூகத்தினால் பெறமுடிந்ததைபோல், காலப்போக்கில் அதிக அளவில் கற்றுக் கொள்ள வேண்டும்.

சிறுபான்மை இன சமூகங்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு, அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு, சார்பு போக்கு நிறுவனங்கள் - வெளிப்படையாக இருத்தல் மற்றும் நிலையாக இருந்து கற்று கொள்ளுதல் போன்றவற்றை ஏற்றுக் கொள்ள வேண்டும். சிறுபான்மை இன நாகரீக சமுதாயத்தில் வலியுறுத்தி காட்டப்பட்ட நாகரீக தேவைகளை ஒத்து கொள்ளவும், அவற்றை இடம் பெற செய்வதற்கான வழிமுறைகளை கண்டறியவும் வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால், சமூக உறுப்பினர்கள் 'சமூக வாழ்வியல் கண்ணோட்டத்திற்கு' பெரிய அளவில் வரவேற்பு அளிக்க மாட்டார்கள். சிறுபான்மை இனத்தை சேர்ந்தவர்கள் அல்லது அதிகார குழுக்களை சேர்ந்தவர்கள் என்ற பாகுபாடு இல்லாமல், அனைத்து சமூகங்களிலும் மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் பல உள்ளன என்பதை அங்கீகரிக்கவும், பிடிவாத குணமற்ற அணுகுமுறைகள் மூலம் நாகரீகத்தின் குறைகள்/இயலாமைகள் குறித்த மனோபாவங்கள்/ வலியுறுத்தல்கள் புரிந்து கொண்டு ஏற்றுக் கொள்ள

வேண்டியது முக்கிய சார்புபோக்கு நிறுவனங்களின் தேவையாக இருக்கிறது.

இது ஒரு எளிமையான அல்லது குறுகிய காலத்தில் செய்யக்கூடிய வேலை இல்லையென்றாலும், இதற்கு புதிய வடிவிலான உரையாடல்கள் மற்றும் கூட்டுறவு/பங்களிப்பு, பரஸ்பர நம்பிக்கையை வலுப்படுத்துதல் மற்றும் எந்த அளவிற்கு சிறப்பாக வெளிப்படுத்த முடியும் என்பதை கற்றுக் கொள்ளக்கூடிய பரஸ்பர செயலாக்கம், கட்டுபாடு (எல்லை) மற்றும் குறைகள்/இயலாமைகள் கொண்ட மக்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர்களுக்கு செய்திதொடர்பிற்கான இடம் மற்றும் மதிப்பு அளித்தல் ஆகியவை தேவைப்படுகிறது. தற்போதைய ஆராய்ச்சி , அந்த உரையாடல்கள், கூட்டுறவு மற்றும் கற்றுக் கொள்ளுதலை போற்றி வளர்ப்பதற்கான ஒரு நல்ல ஆரம்பத்தை வழங்கியிருக்கிறது என்று ரோஹெர் ஸ்தாபனம் நம்புகிறது.

# IX. References


Atkinson, D.R., Maruyama, M., and Matsui, S. "The Effects of Counselor Race and Counseling Approach on Asian Americans' Perceptions of Counselor Credibility and Utility," in Journal of *Counseling Psychology,* 1978, 25, 76-83.

Beimans, H. (2000). The process of employment rehabilitation of torture survivors. In Omega Health Care Centre, Graz. *Mental health community and culture in the EU member states*. Available:

Bell, T.S., Branston, L.K., Newcombe, R.G. & Barton, G.R. (1999). Intervention to improve uptake of breast screening in inner city Cardiff general practices with ethnic minority lists. *Ethnicity and Health, 4(4),* 277-265.

Botan, A.A. (2002). Address to the Seventh International Congress of Somali Studies. Quoted in http://www.globalwarmingmedia.pwp.blueyonder.co.uk/somalia/seventh_int_congress_york.htm, accessed 11/21/03.

British Broadcasting Corporation London (2003). *Somali London*. Available: http://www.bbc.co.uk/london/yourlondon/unitedcolours/somali/welcome_history.shtml, accessed 10/11/03.

CBC News (2003). *Black crime in Toronto: A deathly silence*. Available: http://www.cbc.ca/witness/silence/crime.html, accessed 11/11/03.

Canadian Immigration Hotline (1993). *Somali illegals: The U.S. doesn't want them, but Canada does*. Available: www.canadafirst.net/back_issues/hot-51.txt , accessed 11/11/03.

Canadian Mental Health Association (2003). *Breaking barriers: Ethno-cultural materials tool kit*. Available: http://www.toronto.cmha.ca/c_what_we_do/wwd_breaking_barriers_articles.asp, accessed 12/11/03.

Carey, E. (d/u). *Race, income splits Toronto, study warns*. Available: http://www.geocities.com/CapitolHill/6174/racepoor.html, accessed 11/11/03.

Clement, D. (1999). *Toronto at a turning point: Demographic, economic and social trends in Toronto.* Toronto: United Way of Greater Toronto.

Collacott, M. (2002). *Canada's immigration policy: The need for major reform*. Vancouver: The Fraser Institute.

Elmi, A.S. (1999). *A study on the mental health needs of the Somali community in Toronto*. Toronto: York Community Services & Rexdale Community Health Centre. Available: http://ceris.metropolis.net/Virtual%20Library/health/elmi1.pdf, accessed 11/21/03.

Geromino, J., Folinsbee, S. & Goveas, J. (2001). *A research project into the settlement needs of adult immigrants with limited literacy skills in their first language who have settled in the Greater Toronto Area*. Toronto: The Canadian Multilingual Literacy Centre.

Giddens, A. (1976). Introduction. In M. Weber (1930/2002), *The Protestant ethic and the spirit of capitalism.* Routledge.

Gillette, M.B. (2002). *Between Mecca and Beijing: Modernization and consumption among urban Chinese Muslims.* Stanford University Press.

Griffiths, D.J. (2000). Fragmentation and consolidation: The contrasting cases of Somali and Kurdish refugees in London. *Journal of Refugee Studies, 13(3)*, 281-302.

Health Canada (2003). *Supporting self-care: The contribution of nurses and physicians*. Available: www.hc-sc.gc.ca/hppb/healthcare/pubs/selfcare/4en.htm, accessed 12/11/03.

Howard-Hamilton, M. (d/u). *Research in multicultural counselling*. Available: http://ericcass.uncg.edu/research/howard.html, accessed 07/11/03.

Immen, W. (2000). Somalis pitch in for mutual aid. *Globe and Mail,* Dec. 6, 2000. Available: www.somaliawatch.org/archivedec00/001226101.htm

Israelite, N.K., Herman, A., Alim, F.A., Mohamed, H.A., Khan, Y. & Caruso, L. (1999). *Resettlement experiences of Somali refugee women in Toronto*. (Unpublished paper).

Howard-Hamilton, M. (d/u). *Research in multicultural counselling*. Available: http://ericcass.uncg.edu/research/howard.html, accessed 07/11/03.

Leong, F.T.L. (1986). Counselling and psychotherapy with Asian Americans: Review of the literature. *Journal of Counselling Psychology, 33*, 196-206.

Leung, P. Asian Pacific Americans and Section 21 of the Rehabilitation Act Amendments of 1992. *American Rehabilitation*, 1996, Spring, 2-6.

London, H. & Devore, W. (1988). Layers of understanding: Counselling ethnic minority families. *Family Relations, 37*, 310-314.

McGown, R.B. (1999). *Muslims in the Diaspora: The Somali communities of London and Toronto*. Toronto: University of Toronto Press.

Mind (2003). *About Mind*. Available: http://www.mind.org.uk/About+Mind/, accessed 10/11/03.

Morten, G., and Sue, D.W. *Counseling American Minorities.* Dubuque, Iowa: Wm. C. Brown, 1979.

Ng, K.S. (1999). *Counselling Asian families from a systems perspective*. Alexandria, Virginia: American Counselling Association.

Opoku-Dapaah, E. (1995). *Somali refugees in Toronto: A profile*. Toronto: York Lanes Press.

O'Reilly, F. (2003). Somali's hearts call them home. *Toronto Star*, Aug. 24, 2003.

Osaki, K. (1997). When refugees are women: Emergence of the issue on the international agenda. *Refuge, 16(4)*, 9-16.

Patterson, C.H. (1996). *Multicultural counselling: From diversity to universality. Journal of Counselling and Development, 74,* 227-231.

Ponterotto, J.G. & Casas, J.M. (1991). *Handbook of racial/ethnic minority counselling research*. Springfield, IL: Thomas.

Reitz, J.G. & Lum, J.M. (2001). *Immigration and diversity in a changing Canadian city: Social bases of inter-group relations in Toronto*. Available: http://www.utoronto.ca/ethnicstudies/Idiversity.corrected.pdf, accessed 05/18/2004.

Settlement.org (2003). *Looking at health care*. Available: http://www.settlement.org/cp/english/somalia/health.html, accessed 11/21/03.

Siad, Abdulrazak A. 1991. *Findings on the Somali Community in the City of York*. York Community Services. June 1991. 42 pp. {510}

Silveira, E. & Allebeck, P. (2001). Migration, ageing and mental health: An ethnographic study on perceptions of life satisfaction, anxiety and depression in older Somali men in east London. *International Journal of Social Welfare, 10(4)*, 309-320.

Silveira, E. & Ebrahim, S. (1998). A comparison of mental health among minority ethnic elders and whites in East and North London. *Age and Ageing, 27(3)*, 375-383.

Silveira, E. & Ebrahim, S. (1995). Mental health and health status of elderly Bengalis and Somalis in London. *Age and Ageing, 24*, 474-480.

Somali Immigrant Aid Association (d/u). *A word from Executive Director of S.I.A.O. Mahad Yusuf.* Available at http://webhome.idirect.com/~siao/index.html, accessed 06/15/2004.

Statistics Canada (2003). *Proportion of foreign-born population, census metropolitan areas.* Available: http://www.statcan.ca/english/Pgdb/demo46b.htm, accessed 05/17/2004.

Sue, S. & Zane, N. (1987). *The role of culture and cultural techniques in psychotherapy. American Psychologist, 42*, 37-45.

Tak-fai Lau, J. & Cheung, C. (1999). Discriminatory attitudes to people with intellectual disability or mental health difficulty. *International Social Work, 42(4),* 431-444.

The Roeher Institute (2003). *Job integration for persons with disabilities from ethno-racial communities: Final report*. Toronto: Author.

Thompson, V.C. (1997). Independent and interdependent views of self: Implications for culturally sensitive vocations rehabilitation services. *Journal of Rehabilitation, 63(4)*, 16-20.

The Roeher Institute (2003). *Job integration for persons with disabilities from ethno-racial communities: Final report*. Toronto: Author.

Thompson, V.C. (1997). Independent and interdependent views of self: Implications for culturally sensitive vocations rehabilitation services. *Journal of Rehabilitation, 63(4)*, 16-20.

Van Lehman, D & Eno, O. (d/u). *Somali Bantu: Their history and culture*. Available: www.culturalorientation.net/bantu, accessed 11/21/03.

Virginia Refugee and Immigrant Health Program (d/u). *Somali Bantu: Potential health problems*. Available: http://www.vdh.state.va.us/epi/rihp/bantu.pdf, accessed 11/21/03.

Wilkes, J. (d/u). *Youth leader looks to roots for success*. Available: http://www.skillsforchange.org/news/articles/toronto_star_march_20_2002.htm, accessed 11/11/03.

Wong-Hernandez, L. & Wong, D.W. (2002). The effects of language and culture variables to the rehabilitation of bilingual and bicultural consumers: A review of literature study focusing on Hispanic Americans and Asian Americans. *Disability Studies Quarterly, 22(2)*, 101-119.